கோவிலூர் மரபு வேதாந்த நூல்

ஸ்ரீ சேஷாத்திரி சிவனார் அருளிச் செய்த

நாநா ஜீவ வாதக் கட்டளை

உரையாசிரியர்

கோவிலூர் ஆதீனம்

சீர் வளர் சீர் மெய்யப்ப ஞான தேசிக சுவாமிகள்

வெளியீடு

கோவிலூர் மடாலயம்

(கலாக்ஷேத்ரா பப்ளிகேஷன்ஸ்)

கோவிலூர் மடாலயம்
கோவிலூர் - காரைக்குடி 630307
சிவகங்கை மாவட்டம்
போன் : 04565 236846, 238783

கோவிலூர் மடாலயம்
52 குப்பையாசெட்டி தெரு
மேற்கு மாம்பலம்
சென்னை - 600 033
போன் : 044 - 24743081

ஸ்ரீ சேஷாத்திரி சிவனார் அருளிய

நாநா ஜீவவாதக் கட்டளை

உரை

சீர்வளர்சீர் மெய்யப்ப ஞானதேசிக சுவாமிகள்

கலாக்ஷேத்திரா பப்ளிகேஷன்ஸ்

நிர்வாக அலுவலகம்:	விற்பனை நிலையம்:
கோவிலூர் மடாலயம்,	கோவிலூர் மடாலயம்,
கோவிலூர் 630 307.	52, குப்பையா தெரு,
(காரைக்குடி அருகில்)	மேற்கு மாம்பலம்,
போன்: 04565 - 236846	சென்னை – 33.
E-mail: koviloormutt@gmail.com	போன்: 044 – 24743081

முதற் பதிப்பு : சூலை 2024
பக்கங்கள் : 60
விலை : ₹45/-

சென்னையில் கிடைக்குமிடம்
கோவிலூர் மடாலயம்
42, குப்பையா தெரு,
மேற்கு மாம்பலம், சென்னை-33.
போன்: 044-24743081

நிர்வாக அலுவலகம்
கோவிலூர் மடாலயம்
கோவிலூர் - 630 307.
(காரைக்குடி அருகில்)
தொலைபேசி: 04565-236846
E-mail: koviloormutt@gmail.com

கலாக்ஷேத்ரா அச்சகம்
சென்னை-33.

ஆசியுரை

கோவிலூர் ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ நாச்சியப்ப ஞான தேசிக சுவாமிகள்

இருநூறு ஆண்டுகள் வரலாற்றுப் பாரம்பரியம் உடைய நம்முடைய கோவிலூர் மடாலயம் தோற்றுவித்ததின் முதன்மைக் காரணமே மெய்பொருளியல் (வேதாந்தம்) பரப்புவதும், துறவிகளைப் போற்றுவதும் ஆகிய இரண்டு நோக்கங்களே. அதன் வழியாக கடந்த இருநூறு ஆண்டுகளாக நம்முடைய மடாலயத்தில் வேதாந்தக் கருத்துக்களை இங்கே வருகின்ற ஆர்வமுடைய அனைவருக்கும் சாதி, மத, இன, இல்லறத்தார் துறவிகள் என எந்த வேறுபாடும் இல்லாமல் நம்முடைய மடாலயம் கற்பித்து வந்திருக்கிறது. வேதாந்தத்தைப் பரப்புவதற்காக பலமாநாடுகள், சதஸ் போன்றவற்றை தொடர்ந்து நடத்தி வருகின்றது. இவ்வாறு நடத்தப்பட்டதாலே கோவிலூர் மண்டலி என்றும் கோவிலூர் வேதாந்த மரபு என்றும் இந்தியா மற்றும் உலகெங்கும் பெருமை பெற்றுள்ளது.

முற்காலத்திலே இந்த வேதாந்த நூல்களுக்கு எழுதப்பட்ட பேருரைகள் அனைத்தும் வடமொழி கலந்து மணிப்பிரவாள நடையாக அமைந்திருக்கும்

காரணத்தால் சற்குருநாதர் நாச்சியப்ப சுவாமிகள் ஆசியுடன் எளிய தமிழிலே கோவிலூர் மரபு வேதாந்த நூல்கள் உரை எழுதப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. அவற்றிலே கோவிலூர் வேதாந்த மரபிலே கற்பிக்கப்படும் பதினாறு நூல்களிலே "நாநா ஜீவவாதக்கட்டளை" மட்டும் உரைநடையில் உள்ளது. "நாநா ஜீவவாதக்கட்டளை" என்ற ஒரு நூல் உரை எழுதாமல் நூல்மட்டுமே வெளியிடப்பட்டது.

வேதாந்த மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க இப்பொழுது சுருக்கமான கருத்துரை எழுதப்பட்டு வெளியாகிறது. நாநா ஜீவவாதக்கட்டளை என்பது கோவிலூர் மடாலய வேதாந்த நூல்களிலே முதல் நூலாக கற்பிக்கப்படுகின்ற ஒன்று. மேலும் இந்நூல் வேதாந்த தத்துவங்கள் முப்பத்து ஆறினையும் வரையறை (Definition) மொழியாக உறுதிப்படுத்துகின்ற முதன்மை நூலாகும். இதில் முப்பத்து ஆறு தத்துவங்களையும் தெளிவாக புரிந்து கொள்ளக் கூடிய வகையில் அவற்றின் அடிப்படை உண்மைகளை வேதாந்த மாணவர்களுக்கு கூறுகின்ற நூலாகும்.

இத்தகைய சிறப்புடைய இந்நூலை உரையுடன் வெளியிடுவதிலே கோவிலூர் மடாலயமும் கலாக்ஷேத்ரா பப்ளிகேஷனும் மிகவும் பெருமிதம் அடைகின்றன.

இந்நூல் வேதாந்த மாணவர்கள் அனைவருக்கும் நல்ல பயன் அளிக்க வேண்டும் என்று விரும்புகிறோம்.

ஸ்ரீசற்குருநாதன் துணை

யாவரும் இனிதே வாழ வாழ்த்துக்கள்.

மார்ச் 2016 **சீர்வளர்சீர் மெய்யப்ப ஞானதேசிக சுவாமிகள்**

ஸ்ரீ சேஷாத்திரி சிவனார் அருளிய

நாநா ஜீவவாதக் கட்டளை

சீர்வளர்சீர் மெய்யப்ப ஞானதேசிக சுவாமிகள் உரை விளக்கத்துடன்

நூல் முன்னுரை

அண்ட சராசரங்களில் உள்ள எழுவகைப் பிறப்புகளில் வளர்சிதை மாற்றம், வேறுபாடுகள் காரணமாகப் பலவகையான உயிரினங்கள் தோன்றுகின்றன.

தேவர்கள்	-	14 லட்சம்
மனிதர்கள்	-	9 லட்சம்
விலங்குகள்	-	10 லட்சம்
பறவைகள்	-	10 லட்சம்
ஊர்வன	-	11 லட்சம்
நீர்வாழ்வன	-	10 லட்சம்
தாவரங்கள்	-	20 லட்சம்
மொத்தம்		84 லட்சம்

இந்த 84 லட்சம் வகைகளில் கோடானுகோடி உயிர்கள் தோன்றுகின்றன. அவை ஒவ்வொன்றும் தனித்தன்மை வாய்ந்தவை. இத்தகைய தனித்தன்மை வாய்ந்த அனைத்து உயிர்களும் கடைத்தேறும்

வழிமுறைகளை வேதாந்த நூல்கள் கூறுகின்றன. அத்தகைய ஒரு நூலே நாநா சீவவாதக் கட்டளை ஆகும்.

மனித வாழ்வில் ஒருவர் அடையத்தக்க அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு புருஷார்த்தங்களில், நான்காம் புருஷார்த்தமான வீடுபேறு அடைவதே முக்கியப் புருஷார்த்தமாகக் கருதப்படுகிறது. இதற்கு வழிகாட்டும் நூல்களுள் ஒன்றாகக் கருதப்படும் நாநா சீவவாதக் கட்டளையானது கோவிலூர் மரபில் வேதாந்தம் பயிலும் மாணவர்களுக்கு முதல் நூலாகப் போதிக்கப்படுகிறது.

ஒரு வேதாந்த மாணவன் அறிந்து கொள்ள வேண்டிய அடிப்படைத் தத்துவங்கள் அனைத்தும் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன.

பிரபஞ்சத்தின் தோற்றம் பற்றியும் ஒடுக்கம் பற்றியும் உயிர்களின் தோற்றம் பற்றியும் ஒடுக்கம் பற்றியும் தெளிவாகக் கூறும் அடிப்படைநூல் இதுவே ஆகும்.

நாநா சீவவாதக் கட்டளை என்பதற்கான விளக்கமானது, பலவிதமான சீவர்களைப் பற்றிய தருக்க முறையில் கூறும் நூல் என்பதாகும்.

நான் மனிதன், நான் ஆண், நான் செய்பவன், நான் அனுபவிப்பவன் முதலிய பலவிதமான வேறுபாடுகளை இந்நூலானது உண்மை அறிவின் மூலமாக நீக்கி, நான் வேறுபாடற்ற பிரம்ம வடிவம்; நான் சீவன் முக்தன் எனத் தெளிவாக உரைத்து இந்த அறிவைப் பெற ஆணையிடுகிறது.

நூல்

பிரம்மம் ஐந்து வகையாக விளங்குதல்

சுத்தப் பிரம்மமாய் இருக்கின்ற சர்வ சாட்சியினிடத்தில் அக்கினியில் சூடு போல அபின்னமாக ஒரு சக்தி உண்டு. அந்தச் சக்தி அவ்வதீதப் பிரம்மத்தில் அடங்கி இருக்கும்போது அதற்குச் சுத்தப் பிரம்மம் என்று பெயர்.

அந்தச் சக்தி விசிரிம்பித்து சுத்தப் பிரம்மத்தை வியாபிக்கும்போது அப்பிரம்மம் பரை வியாபகத்துக்குள் இருந்தபடியால் அதற்குப் பரப்பிரம்மம் என்று பெயர். இலட்சண சூனியமாய் இருக்கின்ற இந்தச் சக்திக்குப் பிரம்மத்தினுடைய சந்நிதானத்தில், புருட சமூகத்தில் ஸ்திரீக்கு இன்பம் சனித்தல் போல, அவிகிருத சத்துவ, ரஜோ, தமோ குணங்கள் உண்டாயின. இவற்றில் சுத்த சத்துவத்திற்கு ஆனந்த ரூப சக்தி என்று பெயர். சுத்த ரஜோவுக்கு சித்ரூப சக்தி என்று பெயர். சுத்த தமோவுக்கு சத்ரூப சக்தி என்று பெயர். இவற்றில், காரணமான ஆனந்தரூப சக்தியுடனே பரப்பிரம்மம் கூடிச் சர்வானந்தம் என்னும் சுழுத்தி அவத்தையை அடைகின்றபோது பரப்பிரம்மம் என்கின்ற பெயர் போய் பரமானந்தர் என்கிற பெயர் வந்தது.

இந்தப் பரமானந்தர், சித்ரூப சக்தியுடன் கூடிச் சர்வப் பிரகாசம் என்னும் சொப்பன அவத்தையை அடைகின்றபோது, பரமானந்தர் என்னும் பெயர் போய், தேசோமயர் என்னும் பெயர் வந்தது.

இந்தத் தேசோமயர் சத்ரூப சக்தியுடன் கூடிச் சர்வவியாபகம் என்னும் சாக்கிர அவத்தையை அடைகின்றபோது தேசோமயர் என்னும் பெயர் போய்ப் பரிபூரணர் என்னும் பெயர் வந்தது.

உரை

அனைத்து சீவராசிகளும் கடைத்தேறும் பொருட்.டுத் தனு, கரண, புவன, போகங்களை உருவாக்கித் தருவது பிரம்மம் ஆகும்.

எங்கும் பரந்து, விரிந்து நிறைந்ததும், அண்ட சராசரங்களுக்கும் பெரியதும், அணுவுக்கும் சிறியதும், சர்வ வல்லமை பொருந்தியதும், பூரணமானதும், வளர் மாற்றங்கள் இல்லாததும், நிரந்தரமானதுமான இந்தப் பிரம்மம் மட்டுமே சுத்தமானது. ஏனைய 35 தத்துவங்களும் அசுத்தமானவை.

ஆறு தத்துவங்களாய் இருக்கும் தூல சரீரத்துக்கு அசுத்தமானது ஒழுகும் தன்மை உடைய ஒன்பது துவாரங்களாகும்.

இருபது தத்துவங்களாக உள்ள சூட்சும சரீரத்திற்கு அசுத்தமானது விருப்பு வெறுப்பு போன்ற குணங்களாகும்.

ஐந்து பூதங்களுள் பூமிக்கு அசுத்தமானது சகல கழிவுகளும் குப்பைகளுமாகும். நீருக்கு அசுத்தமானது அதில் தோன்றும் நுரைகளும் பாசிகளுமாகும். நெருப்புக்கு அசுத்தமானது புகையும், மஞ்சள் கலந்த செம்மை நிறமும் ஆகும். வாயுவுக்கு அசுத்தமானது அசைதல் மற்றும் நாற்றங்களைப் பரப்புதல் ஆகும். ஆகாயத்துக்கு அசுத்தம் இடி, மின்னல், மேகம் போன்றவையாகும்.

ஜீவனுக்கு அசுத்தமானது சாதி, பிறப்பு இறப்பில் உழல்தல் ஆகியனவாகும்.

அவித்தைக்கு அசுத்தமானது பிரம்மத்தை மறைப்பதும், அறிவு தோன்றியபோது அழிவதுமாகும்.

ஈசுவரனுக்கு அசுத்தமானது படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களாகும்.

மாயைக்கு அசுத்தமானது குவிதலும் விரிதலுமாகும்.

இவைபோலன்றி எல்லாவற்றிற்கும் சாட்சியாக இருக்கின்ற சுத்தப் பிரம்மத்திற்கு அக்கினியில் சூடுபோலப் பிரிக்க முடியாத ஓர் உள்ளுறை சக்தி உண்டு. அந்தச் சக்தி எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பிரம்மத்தின் உள்ளே ஒடுங்கி இருக்கும்போது அதற்குச் சுத்தப் பிரம்மம் என்று பெயர்.

அந்த அளவிடற்கரிய சக்தி வெளிப்பட்டு வளர்ந்து விரிவடைந்து நீக்கமற நிறைந்து உள்ளபோது அந்தப் பிரம்மம் பரப்பிரம்மம் என்று பெயர் பெறுகிறது. இந்தப் பரப்பிரம்மம் உற்பத்தி, அழிவு இன்றியும், உறுப்புகள் ஏதுமற்றும் இருக்கும்.

அதுசமயம், காதல் கணவரைப் பலகாலம் பிரிந்திருந்து பின் காண்கிற மனைவிக்கு எவ்வாறு இன்பம் பெருக்கெடுக்குமோ, அவ்வாறு பரப்பிரம்மத்திற்கு வேறுபாடற்ற மூன்றுவிதமான குணங்கள் தோன்றின. அவை சத்துவம், ரஜோ, தமோ என அழைக்கப்படும். இந்தக் குணங்கள் ஒன்றோடொன்று சேராத நிலையில் அவை சுத்த சத்துவம், சுத்தரஜோ, சுத்த தமோ என அழைக்கப்படும்.

இந்த மூன்று குணங்களில் சுத்த சத்துவத்திற்கு ஆனந்த ரூப சக்தி (சுகரூப சக்தி), சுத்த ரஜோவுக்கு சித்ரூப சக்தி (அறிவு ரூப சக்தி), சுத்த தமோவுக்கு சத்ரூப சக்தி (உண்மைரூப சக்தி) என்று பெயர்.

பரப்பிரம்மம் ஆனந்தரூப சக்தியோடு கூடிச் சர்வானந்தம் என்ற சுழுத்தி அவத்தையை அடைகின்றபோது, அதற்குப் பரப்பிரம்மம் என்ற பெயர்போய்ப் பரமானந்தர் என்ற பெயர் வந்தது.

இந்தப் பரமானந்தர் சித்ரூப சக்தியோடு கூடிச் சர்வப் பிரகாசம் என்னும் சொப்பன அவத்தையை அடைகின்றபோது அவருக்குப் பரமானந்தர் என்கிற பெயர் போய்த் தேசோமயர் (சோதி வடிவானவர்) என்ற பெயர் வந்தது.

இந்தத் தேசோமயர் சத்ரூப சக்தியோடு கூடிச் சர்வவியாபகம் என்னும் சாக்கிர அவத்தையை அடைகின்றபோது அவருக்குத் தேசோமயர் என்ற பெயர்போய்ப் பரிபூரணர் (எங்கும் நிறைந்தவர்) என்ற பெயர் வந்தது.

நூல்

மூலப் பிரகிருதியும் ஈசுவரத் தோற்றமும்

இந்த அகண்ட பரிபூரண சச்சிதானந்தப் பிரம்மத்தினிடத்தில் சுத்தியில் ரஜதம் போல மூலப்பிரகிருதி என்னும் ஒரு சக்தி உண்டு. அந்த மூலப்பிரகிருதியும் விகிருத குணமாகிய முக்குணத்தோடு கூடியிருக்கும். அந்தப் பிரகிருதியின் சத்துவ குணம் மாயை என்றும், சர்வக்ஞ உபாதி என்றும், ஈசுவர காரண சரீரம் என்றும் சொல்லப்படும். இந்த

மாயையினிடத்தில் நிர்மலசலப் பிரதிபிம்பம் போலப் பிரம்மம் சுலட்சணமாகப் பிரதிபிம்பிக்கும், இந்தப் பிரதிபிம்ப சைதன்யம் சர்வக்ஞனாகிய ஈசுவரன் என்று சொல்லப்படும்.

உரை

எல்லையற்றதும் எங்கும் எக்காலத்தும் உள்ளதும், ஒளிமயமானதும், ஆனந்தமயமாகவும் இருக்கின்ற பிரம்மத்தில் சிப்பியில் கற்பிதமாகத் தோன்றுகின்ற வெள்ளி போல மூலப்பிரகிருதி என்ற ஒரு சக்தி இருக்கும். இந்தச்சக்தி சத்துவம், ரஜோ, தமோ என்னும் முக்குணங்களைப் பெற்றிருக்கும். இவற்றில் சத்துவ குணமே மாயை எனப்படுகிறது. இந்தச் சத்துவகுணமாயை சர்வக்ஞ உபாதி என்றும் ஈசுவரனுக்குக் காரண சரீரம் என்றும் சொல்லப்படும்.

தெளிந்த நீரில் சூரியனின் பிரதிபிம்பம் தோன்றுவதுபோல மாயையில் களங்கமற்ற பிரம்மம் பிரதிபிம்பிக்கும். இவ்வாறு பிரதி பிம்பிக்கும் பிரம்மமே சர்வக்ஞனாகிய ஈசுவரன் என்று அழைக்கப்படும்.

நூல்

ஈசுவரன் மும்மூர்த்திகளாக விளங்குதல்

இந்தச் சத்துவகுண மாயையினிடத்தில் சத்துவத்தில் சத்துவம், சத்துவதில் ரஜோ, சத்துவத்தில் தமோ என மூன்று குணங்கள் உண்டு. இவைகளில் சத்துவத்தில் சத்துவம் பிரதானமாகும்போது அதில் பிரதிபிம்பித்த ஈசுவரன் சகத்தை இரட்சிக்கையினாலே விஷ்ணு என்றும், சத்துவத்தில் ரஜோ பிரதானமாகும்போது அதில் பிரதிபிம்பித்த ஈசுவரன் சகத்தை சிருஷ்டிக்கையினாலே பிரம்மா என்றும், சத்துவத்தில்

தமோ பிரதானமாகும்போது அதில் பிரதிபிம்பித்த ஈசுவரன் சகத்தை உபசம்ஹாரம் பண்ணுகையினால் உருத்திரன் என்றும் சொல்லப்படுவான். இப்படி மூலப்பிரகிருதியின் சத்துவகுணக் கற்பனை சொல்லப்பட்டது.

உரை

இந்தச் சத்துவகுண மாயையிடத்தில் சத்துவம் மிகுந்து காணப்படுகின்றபோது அதில் பிரதிபிம்பிக்கிற ஈசுவரன் காக்கும் கடவுள் விஷ்ணு என்று சொல்லப்படுகிறான். ரஜோ குணம் மிகுந்து காணப்படுகின்றபோது அதில் பிரதிபிம்பிக்கிற ஈசுவரன் படைக்கும் கடவுள் பிரம்மா என்று சொல்லப்படுகிறான். தமோகுணம் மிகுந்து காணப்படுகின்றபோது அதில் பிரதி பிம்பிக்கிற ஈசுவரன் அழிக்கும் கடவுள் உருத்திரன் என்று சொல்லப்படுகிறான்.

இவ்வாறு மூலப்பிரகிருதியின் சத்துவ குண மாயையில் முக்குண ஈசுவரர்களின் தோற்றம் சொல்லப்பட்டது.

படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களும் ஈசுவரனுக்கு உரைக்கப்படுகிறது. ஈசுவரன் ஒருவனே, அவன் முத்தொழில்களையும் செய்வதால் மூவராகக் கற்பிதமாகச் சொல்லப்படுகிறது. இறைவனுக்குப் பெயர், வடிவம் இல்லை. ஆனால் பாமரர்கள் தங்கள் அறிவுக்கு எட்டியவாறு புரிந்துகொண்டு பக்தி செய்ய இறைவனுக்குப் பெயர் உருவங்கள் கூறப்படுகின்றன. மேலும் உபாசனைக்கும் அருச்சனைக்கும் உருவங்கள் அவசியமாகின்றன.

நூல்

சீவர்களின் தோற்றமும் அவர்களின் பேதங்களும்

இனி, மூலப்பிரகிருதியின் ரஜோ குணம் அநேக ரூபமாய்ப் பிரிந்து, அவித்தைகள் என்றும், சீவ காரண சரீரங்கள் என்றும் ஒன்றுக்கொன்று தாரதம்மியமாகச் சொல்லப்படும். இந்த அவித்தைகளிடத்திலும் ரஜோவில் சத்துவம், ரஜோவில் ரஜோ, ரஜோவில் தமோ என்ற மூன்று குணங்கள் உண்டு. ரஜோவில் சத்துவம் பிரதானமாகும்போது, அதில் பிரதிபிம்பித்த சிதாபாசன் தத்துவ ஞானநிஷ்டன் ஆவன். ரஜோவில் ரஜோ பிரதானமாகும்போது அதில் பிரதிபிம்பித்த சிதாபாசன் காமக்குரோதபரனாய்க் கர்மநிஷ்டன் ஆவன். ரஜோவில் ரஜோ பிரதானமாகும்போது, அதில் பிரதிபிம்பித்த சிதாபாசன் சோம்பல், நித்திரை, மயக்கம் ஆகிய இவைகளை அடைவன். இப்படி மூலப்பிரகிருதியின் ரஜோகுணக் கற்பனை சொல்லப்பட்டது.

உரை

மூலப்பிரகிருதியில் ரஜோகுணமானது அதிகமாகும்போது அநேக வடிவங்களாகப் பிரிந்து அவித்தை அல்லது சீவகாரண சரீரங்கள் தோன்றுகின்றன.

கலங்கிய நீரிலே பலவிதமான குமிழிகள் தோன்றும். இவை ஒவ்வொன்றும் தனித்தனியான குணங்களையும் வடிவங்களையும் கொண்டவையாக இருக்கும். அதுபோலவே அவித்தையில் தோன்றிய அநேக சீவர்கள் வெவ்வேறுபட்ட குணங்களையும் வடிவங்களையும் உடையவர்களாகத் தோன்றுவார்கள்.

இவர்கள் சீவ சிதாபாசர் என்றும், கிஞ்சிக்ஞர் என்றும் பிராக்ஞர் என்றும் அழைக்கப்படுவார்கள்.

சிதாபாசர் என்பதற்கு உண்மை அறிவின் போலி என்றும், இஞ்சிக்ஞர் என்பதற்குக் குறைந்த அறிவை உடையவர் என்றும், பிராக்ஞர் என்றால் அறிவை உடையவர் என்றும் பொருள்.

இந்த ரஜோ குணத்தில், ரஜோவில் சத்துவம், ரஜோவில் ரஜோ, ரஜோவில் தமோ என்ற முக்குணங்கள் தோன்றும்.

ரஜோவில் சத்துவம் அதிகமாகும்போது அதில் பிரதிபிம்பமாக உள்ள சிதாபாசன் தத்துவ நிஷ்டனாகத் திகழ்கிறான். அவன் அப்பிறப்பிலேயே ஞானம் அடையத் தகுதி உடையவானத் திகழ்கிறான். ரஜோவில் ரஜோ அதிகமாகும்போது அதில் பிரதி பிம்பமாக உள்ள சிதாபாசன் கர்ம நிஷ்டனாகத் திகழ்கிறான். அவன் காமம், குரோதம் முதலிய குணங்களால் அலைக்கழிக்கப்படுவான். எனினும் கர்மத்தைச் சரியான நெறிப்படி செய்பவனாக இருப்பான். அவனுக்கு ஞானம் கிட்டப் பல பிறப்புகள் ஆகலாம். ரஜோவில் தமோ அதிகமாகும்போது அதில் பிரதிபிம்பமாய் உள்ள சிதாபாசன் சோம்பல், நித்திரை, மயக்கம் உடையவனாகக் கடைநிலையில் இருப்பான். அவனுக்கு ஞானம் கிட்டப் பல்லாயிரம் பிறப்புகள் ஆகலாம்.

இப்படியாக மூலப்பிரகிருதியின் ரஜோகுணக் கற்பனை சொல்லப்பட்டது. சீவர்களின் காரணஉடல் விவரமும் சொல்லப்பட்டது.

நூல்

ஆவரணத்தின் தன்மை

இனி மூலப்பிரகிருதியின் தமோ குணத்திற்கு ஆவரணம், விட்சேபம் என்ற இரண்டு சக்திகள் உண்டு. இவ்விரண்டில் ஆவரண சக்தியானது தத்துவஞானியையும் ஈசுவரனையும் தவிர, மற்றைச் சீவருக்கெல்லாம் சரீரத் திரயம், சிதாபாசன், சாட்சி சைதன்யம் என்னும் இவைகளின் ஒன்றுக்கொன்று உள்ள பேதம் தெரிய ஒட்டாமல் மறைக்கும். இதனால் மறைபட்ட சீவர் இருபத்தொன்பது தத்துவங்களையும் ஒருமைப்பாடாக நான் என்று அபிமானிப்பர். இந்த அபிமானத்தை அகங்காரக் கிரந்தி என்றும் சம்சார பந்தம் என்றும் சொல்வர். சத்குரு கடாட்சத்தினாலே இந்த ஆவரணம் நீங்கி, இருபத்தொன்பது தத்துவங்களின் ஒன்றிற்கொன்றுள்ள பேதம் தெரிகின்றதே முக்தி. இப்படி ஆவரண சக்தியின் காரியம் சொல்லப்பட்டது.

உரை

மூலப்பிரகிருதியில் தமோ குணம் மிகுந்து காணப்படும்போது அக்குணம் ஆவரணம், விட்சேபம் என இரண்டு சக்திகளாகப் பிரிந்து தோன்றும். ஆவரணம் என்றால் மறைப்பு மேற்போர்வை என்று பொருள்படும். திரைக்கு அப்பால் உள்ள பொருள்கள் எவையும் தெரியமாட்டா. மழைக்கால இருளில் எதுவும் புலப்படாது. அதைப்போல, உள்ள பொருளை நாம் காணவொட்டாது மறைக்கும் சாமர்த்தியம் கொண்டது ஆவரண சக்தி.

இந்த ஆவரணசக்தி ஈசுவரனையும் தத்துவ ஞானிகளையும் தவிர அனைத்துச் சீவர்களுக்கும் மறைத்தலைச் செய்யும். ஏனெனில் ஈசுவரன் மறைக்கப்படாதவன். ஞானி, சத்குரு உபதேசத்தினால் இந்த மறைப்புகளையெல்லாம் கடந்தவன்.

மூவகைத் தேகங்களுக்கும், சீவனான சிதாபாசனுக்கும், இவற்றிற்குச் சாட்சியாக உள்ள சைதன்யத்திற்கும் உள்ள வேறுபாடுகளை அறியவிடாமல் மறைக்கக்கூடியது இந்த ஆவரண சக்தியாகும்.

இந்த அறியாமையினால் தானே பிரம்மமாக இருப்பதை அறியாமல் கீழ்ப்பட்ட இருபத்தொன்பது தத்துவங்களே தான் என்று எண்ணி மயங்குகிறான்.

இருபத்தொன்பது தத்துவங்களாவன:

தூலத் தத்துவம்	6
சூட்சுமத் தத்துவம்	20
காரணத் தத்துவம்	1
சிதாபாசன்	1
கூடஸ்தன்	1
மொத்தம்	29

இவ்வாறு இருபத்தொன்பது தத்துவங்களும் 'தான்' என்று எண்ணுவதே அகங்கார முடிச்சு என்றும் சம்சார பந்தம் என்றும் அழைக்கப்படுகிறது.

இந்த மயக்கம் தெளிந்து முன்னே சொன்னவற்றிற்கு இடையே உள்ள வேறுபாடுகளை அறிந்து ஒதுக்கி ஞானம் பெற முயல்வதே ஆவரணத்தை ஒழிக்கும் வழியாகும். அதற்கு இறையருளும் சத்குருவின் உபதேச ஞானமும் சாதனங்கள் ஆகும்.

இவ்வாறு ஆவரண சக்தியின் செயல்பாடும், அதை நீக்கும் முறைகளும் கூறப்பட்டன.

நூல்

விட்சேபத்தின் தன்மை

இனி, விட்சேப சக்தியினின்றும் சத்த தன்மாத்திரையான ஆகாசம் தோன்றிற்று. ஆகாசத்தினின்றும் பரிச தன்மாத்திரையான வாயு தோன்றிற்று. வாயுவினின்றும் ரூப தன்மாத்திரையான அக்கினி தோன்றிற்று. அக்கினியினின்றும் ரஸ தன் மாத்திரையான அப்பு தோன்றிற்று. அப்புவினின்றும் கந்த தன்மாத்திரையான பிருத்வி தோன்றிற்று. இந்தச் சூட்சும பஞ்ச பூதத்திற்குக் காரணமாய் இருக்கின்ற விட்சேப சக்தியினிடத்தில் தமோவில் சத்துவம், தமோவில் ரஜோ, தமோவில் தமோ என்னும் இவை அற்பம் கருவாக இருந்தபடியால் அதன் காரியமாகிய இந்தத் தன்மாத்திரைகளான பஞ்சபூதங்களும் முக்குணங்களுடனே பிறந்தன. இந்தப் பஞ்சபூதங்கட்குத் தன்மாத்திரைகள் என்றும், அபஞ்சீகிருத பூதங்கள் என்றும், சூட்சும பூதங்கள் என்றும், முக்குண பூதங்கள் என்றும் சாஸ்திரங்களில் நாமம் சொல்லப்படும்.

உரை

தமோ குணத்தின் விட்சேப சக்தியில் இருந்து சத்தத்தைத் தனிக்குணமாகக் கொண்ட ஆகாயம் தோன்றியது. ஆகாயத்திலிருந்து, பரிசத்தைத் தனிக்குணமாகக் கொண்ட வாயு தோன்றியது. வாயுவிலிருந்து ரூபத்தைத் தனிக்குணமாகக் கொண்ட அக்கினி தோன்றியது. அக்கினியிலிருந்து சுவையைத்

தனிக்குணமாகக் கொண்ட நீர் தோன்றியது. நீரிலிருந்து வாசனையைத் தனிக்குணமாகக் கொண்ட பூமி தோன்றியது.

இந்தத் தமோகுணத்து விட்சேப சக்தியிலும் சத்துவம், ரஜோ, தமோ என்ற முக்குணங்கள் கலந்து இருக்கிறபடியாலும், ஐம்பூதங்களும், கருவான நிலையில் வெளிப்படாமல் இருப்பதாலும் ஐம்பூதங்களும் முக்குணத்துடனேயே இருக்கும்.

இந்தப் பூதங்கள் ஐந்தும் தனிக்குணங்களோடு இருப்பதால் அவை தன்மாத்திரைகள் என்றும், சூட்சும பூதங்கள் என்றும் அபஞ்சீகிருத பூதங்கள் என்றும் அழைக்கிறோம். பஞ்சீகிருதம் என்பது ஐந்து பூதங்களும் ஒன்றோடு ஒன்று பகிர்ந்தும் சேர்ந்தும் கலந்தும் இருப்பது. அவ்வாறு பகிர்ந்தும் சேர்ந்தும் கலக்காமலும் இருப்பது அபஞ்சீகிருதம் ஆகும்.

நூல்

அந்தக்கரணங்களின் தோற்றம்

இந்தச் சூட்சும பூதங்களினின்றும் சூட்சும சரீரங்களும், தூல பூதங்களும் தோன்றும். அது எங்ஙனம் எனின்: ஆகாயம் முதலான பஞ்சபூதங்களின் சத்துவ அம்சத்திலே பூதத்திற்கு ஒவ்வொரு மாத்திரை எடுத்து ஒன்றாகக் கூட்டி வைத்தது அந்தக்கரணம். இந்த அந்தக் கரணத்தில் ஆகாயத்தின் அம்சம் கூடினதற்கு அடையாளம், இந்த அந்தக்கரணமும் ஆகாயத்தைப் போலச் சகலமான கேள்விகளுக்கும் இடம்கொடுத்துத் தரிக்கின்றது. இப்படித் தரிக்கின்ற விருத்திக்கு உள்ளம் என்று பெயர். இந்த அந்தக்கரணத்தில், வாயுவின் அம்சம் கூடினதற்கு அடையாளம். இந்த அந்தக்

கரணமும் வாயுவைப்போல அலைகிறது. இப்படி அலைகின்ற விருத்திக்கு மனம் என்று பெயர். இந்த அந்தக்கரணத்தில் அக்கினியின் அம்சம் கூடினதற்கு அடையாளம், இந்த அந்தக்கரணமும் அக்கினியைப் போல இன்னது என்று விளக்குவிக்கின்றது. இப்படி விளக்குவிக்கின்ற விருத்திக்குப் புத்தி என்று பெயர். இந்த அந்தக்கரணத்தில் அப்புவின் அம்சம் கூடினதற்கு அடையாளம், இந்த அந்தக்கரணமும் அப்புவைப்போல விஷயங்களில் பற்றி இழுக்கிறது. இப்படி இழுக்கின்ற விருத்திக்குச் சித்தம் என்று பெயர். இந்த அந்தக் கரணத்தில் பிருத்வியின் அம்சம் கூடினதற்கு அடையாளம், இந்த அந்தக்கரணமும் பிருத்வியைப் போலக் கடினமாக நின்று நானென்று அபிமானிக்கிறது. இந்த அபிமான விருத்திக்கு அகங்காரம் என்று பெயர்.

உரை

இந்தச் சூட்சும பூதங்களிலிருந்து சூட்சும சரீரங்களும் தூல பூதங்களும் உண்டாயின. முக்குணங்களுடன் இருக்கும் சூட்சும பூதங்கள் ஒவ்வொன்றின் சத்துவ அம்சத்திலிருந்து ஒவ்வொரு பங்கு எடுத்துக் கூட்டி வைத்ததால் அந்தக் கரணங்கள் உருவாயின. அந்தக்கரணங்கள் உள்ளிருந்து இயங்கும் உட்கருவிகளாகும்.

உள்ளம், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் இந்த அந்தக்கரணங்கள் ஐந்தும் ஐம்பூதங்களின் அம்சத்துடனேயே இயங்கும்.

ஆகாயத்தின் சத்துவ அம்சத்தின் ஒருபகுதியிலிருந்து உள்ளம் தோன்றுகிறது. ஆகாயம் சகல பொருள்களுக்கும் இடம் அளிப்பதுபோல உள்ளமும் சகலவிதமான கேள்விகளுக்கும் இடமளிக்கிறது.

வாயுவின் சத்துவ அம்சத்தின் ஒரு பகுதியிலிருந்து மனம் தோன்றுகிறது. வாயு அங்குமிங்கும் அலைவது போல மனமும் அங்குமிங்கும் அலைபாய்கிறது.

அக்கினியின் சத்துவ அம்சத்தின் ஒரு பகுதியிலிருந்து புத்தி தோன்றுகிறது. அக்கினி எதையும் ஒளி தந்து விளக்குவது போலப் புத்தியும் ஒன்றை இது என்று தெளிவாக்குகிறது.

நீரின் சத்துவ அம்சத்தின் ஒரு பகுதியிலிருந்து சித்தம் தோன்றுகிறது. நீரானது அனைத்தையும் இழுத்துச் சேர்த்துக் கொள்வது போலப் புத்தியால் தெளிவிக்கப்பட்ட விஷயங்கள் அனைத்தையும் சித்தம் சேர்த்து வைத்துக் கொள்கிறது.

பூமியின் சத்துவ அம்சத்தின் ஒரு பகுதியிலிருந்து அகங்காரம் தோன்றியது. பூமி கடினத் தன்மையோடு இருப்பதுபோல, அகங்காரமும் நான், எனது என்னும் உணர்வுகளை உருவாக்கிக் கடினத்தன்மை உடையதாக இருக்கிறது.

எண்	அந்தக் கரணம்	இடம்	தேவதை	தொழில்
1.	உள்ளம்	சிரம்	சதாசிவன்	இடமளித்தல்
2.	மனம்	கண்டம்	சந்திரன்	சங்கற்ப விகற்பம்
3.	புத்தி	இருதயம்	பிரம்மன்	நிச்சயித்தல்
4.	சித்தம்	நாபி	விஷ்ணு	நினைவகம்
5.	அகங்காரம்	சர்வாங்கம்	உருத்திரன்	அபிமானம்

அந்தக் கரணங்கள் தானாகச் செயல்படாது. மற்ற புலன்களுடன் இணைந்தே செயல்படும். பொதுவாக

நூல்களில் அந்தக்கரணங்கள் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் நான்காகவே குறிப்பிடப்படும். உள்ளம் என்ற அந்தக்கரணம் மனதோடு சேர்த்துக் கொள்ளப்படும்.

நூல்

ஞானேந்திரியங்களின் தோற்றம்

இன்னும், ஆகாயம் முதலான பஞ்ச பூதங்களினுடைய சத்துவ அம்சத்திலே, பூதத்திற்கு ஒவ்வொரு மாத்திரை எடுத்துத் தனித்தனியே வைத்தது சுரோத்திராதி ஞானேந்திரியம் என்று சொல்லப்படும். இவைகளில், சுரோத்திரம், ஆகாயத்தின் அம்சம் ஆனபடியால் ஆகாயத்தின் குணமான சத்தம் மாத்திரத்தை அறியும். துவக்கு வாயுவின் அம்சம் ஆனபடியால் வாயுவின் குணமான பரிச மாத்திரத்தை அறியும். சுட்சு அக்கினியின் அம்சம் ஆனபடியால் அக்கினியின் குணமான ரூப மாத்திரத்தை அறியும். சிங்நுவை அப்புவின் அம்சம் ஆனபடியால் அப்புவின் குணமான ரச மாத்திரத்தை அறியும். கிராணம் பிருத்வியின் அம்சம் ஆனபடியால் பிருத்வியின் குணமான கந்தமாத்திரத்தை அறியும். இப்படி ஐந்தும் ஒன்றோடொன்று கூடாதபடியால் ஒன்று மற்றொன்றின் குணத்தைக் கிரகிக்க அறியாது. அந்தக்கரணத்தில், ஐந்து மாத்திரையும் ஒன்றாய்க் கூடினது கொண்டு ஐந்து இந்திரியங்களாலும், ஐந்து விஷயங்களையும் அறியும். இந்தச் சத்துவகுணத்தில் உண்டான அந்தக்கரணம் ஐந்தும், ஞானேந்திரியம் ஐந்தும் ஆகப் பத்தும், சத்துவ அம்சம் ஆனபடியால் ஞானசாதனம் ஆயின.

உரை

ஐம்பூதங்களின் சத்துவ அம்சத்தின் ஒரு பகுதியிலிருந்து அந்தக் கரணங்கள் உருவானதுபோல, ஐம்பூதங்களின் சத்துவ அம்சத்தின் மற்றொரு பகுதியிலிருந்து ஞானேந்திரியங்கள் உருவாயின.

ஆகாயத்தின் சத்துவ அம்சத்திலிருந்து அதன் குணமான சத்தத்தை மட்டுமே அறியக்கூடிய செவி உருவாகிறது.

வாயுவின் சத்துவ அம்சத்திலிருந்து அதன் குணமான பரிசத்தை மட்டுமே அறியக்கூடிய தோல் உருவாகிறது.

அக்கினியின் சத்துவ அம்சத்திலிருந்து அதன் குணமான ரூபத்தை மட்டுமே அறியக்கூடிய கண் உருவாகிறது.

நீரின் சத்துவ அம்சத்திலிருந்து அதன் குணமான சுவையை மட்டுமே அறியக் கூடிய நாக்கு உருவாகிறது.

பூமியின் சத்துவ அம்சத்திலிருந்து அதன் குணமான வாசனையை மட்டுமே அறியும் மூக்கு உருவாகிறது.

இந்த ஐந்து ஞானேந்திரியங்களும் ஒன்று அறிவதை மற்றொன்று அறியாது. மேலும் இவற்றால் மனத்துடன் இணைந்தே செயல்பட முடியும்.

எண்	ஞானேந்திரியம்	இடம்	தேவதை	தொழில்
1.	செவி	செவி	திசை	கேட்டல்
2.	தோல்	தோல்	வாயு	பரிசித்தல்
3.	கண்	கண்	சூரியன்	காணல்
4.	நாக்கு	நாக்கு	வருணன்	ருசித்தல்
5.	மூக்கு	மூக்கு	அசுவினி	மோத்தல்

நூல்

பிராணன் முதலான வாயுக்களின் தன்மை

இன்னும், ஐந்து பூதங்களுடைய ரஜோ அம்சத்தில், பூதத்திற்கு ஒவ்வொரு மாத்திரை எடுத்து ஒன்றாகக் கூட்டி வைத்தது வியானாதி பஞ்ச வாயுக்கள். இவைகளில் வியானவாயு ஆகாயத்தின் அம்சமானபடியால் ஆகாயத்தைப் போலச் சர்வாங்கமும் வியாபித்திருக்கும்.

பிராணவாயு வாயுவின் அம்சமானபடியால் வாயுவைப்போல இருதயத்திலிருந்து நாசிகாதி பரியந்தம் அலையும். அபானவாயு அக்கினியின் அம்சமானபடியால் அக்கினியைப் போலச் சாடராக்கினியாக உஷ்ணித்துக் கொண்டு, குதத்தைப் பற்றி நின்று, உண்ட அன்ன பானாதிகளைச் சீரணிப்பிக்கும். சமானவாயு அப்புவின் அம்சமானபடியால் சரீர நடுவான நாபித் தானத்தில் நின்று, உண்ட அன்னரசங்களை அப்புவைப்போல இழுக்கும். உதானவாயு பிருத்வியின் அம்சமானபடியால் கண்டத்தைப் பற்றிப் பிருத்வியைப் போலக் கடினமாக நின்று உண்ட அன்ன பானாதிகளைக் கடையும்.

இந்தப் பஞ்ச வாயுக்களையும் அல்லாமல், வாந்தி பண்ணுவிக்கிறது நாகன் என்றும், இமைத்து விழிப்பிக்கின்றது கூர்மன் என்றும், குறுகுறுத்துத் தும்மச் செய்கிறது கிரிகரன் என்றும், கொட்டாவி கொள்ளச் செய்கின்றது தேவதத்தன் என்றும் வீங்கச் செய்கின்றது தனஞ்செயன் என்றும், வேறே ஐந்து வாயுக்கள் உண்டென்று சிலர் சொல்லுவர். இவ்வைந்தும் பிராணனின் தொழில் ஆனபடியால் வேறல்ல.

உரை

மேலும், சூட்சும ஐம்பூதங்களின் ரஜோ அம்சத்தின் ஒரு பகுதியிலிருந்து வியானன் முதலான ஐந்து வாயுக்கள் உருவாயின.

ஆகாயத்தின் ரஜோ அம்சத்திலிருந்து வியானவாயு உருவாகிறது. ஆகாயம் எங்கும் வியாபித்து இருப்பதைப்போல வியானவாயுவும் உடல் முழுவதும் பரவியிருக்கும்.

வாயுவின் ரஜோ அம்சத்திலிருந்து பிராணவாயு உருவாகிறது. வாயுவின் அலையும் தன்மையைப் போல பிராணவாயுவும் மூக்கிற்கும் இதயத்திற்கும் இடையே அலைந்து கொண்டிருக்கும்.

அக்கினியின் ரஜோ அம்சத்திலிருந்து அபான வாயு உருவாகிறது. அக்கினி தன்னிடத்தில் இட்ட பொருள்களைத் தன்வயப்படுத்துவது போல அபான வாயுவும் குதத்தைப் பற்றி நின்று நாம் உண்ணும் திட, திரவ உணவு வகைகளைச் செரிமானம் செய்கிறது.

நீரின் ரஜோ அம்சத்திலிருந்து சமான வாயு உருவாகிறது. நீர் அனைத்தையும் பற்றி இழுப்பதைப் போலச் சமானவாயுவும் நாபித்தானத்திலிருந்து உண்ட உணவுகளைப் பற்றி இழுக்கும்.

பூமியின் ரஜோ அம்சத்திலிருந்து உதானவாயு உருவாகிறது. நிலத்தின் கடினத்தன்மையைப் போலக் கழுத்துப் பகுதியில் இருந்து உண்ணும் உணவுகளைக் கடைந்து செரிமானத்திற்கு ஏற்றதாகச் செய்கிறது.

எண்	வாயு	இடம்	தேவதை	தொழில்
1.	வியானன்	சர்வாங்கமும்	விசுவயோனி	தாங்குதல்
2.	பிராணன்	இதயம்	விசிட்டன்	சுவாசித்தல்
3.	அபானன்	குதம்	விசுவகர்த்தா	சீரணித்தல்
4.	சமானன்	நாபி	சயன்	இழுத்தல்
5.	உதானன்	கழுத்து	அஜன்	கடைதல்

இந்த ஐந்து வாயுக்கள் தவிர மேலும் ஐந்து துணைவாயுக்கள் உண்டு. வேண்டாதவற்றை வெளியேற்ற வாந்தி பண்ணச் செய்யும் வாயு நாகன் எனப்படும். கண் இமைகளை மூடித்திறக்கச் செய்யும் வாயு கூர்மன் எனப்படும். குறுகுறுத்துத் தும்மலை ஏற்படுத்தும் வாயு கிரிகரன் எனப்படும். கொட்டாவி விடச் செய்யும் வாயு தேவதத்தன் எனப்படும். இறந்த பிறகு உடலை வீங்கச் செய்யும் வாயு தனஞ்செயன் எனப்படும். இவை ஐந்தும் பிராண வாயுவின் துணை வாயுக்களாகவே கருதப்படுகின்றன.

நூல்

கர்மேந்திரியங்களின் தன்மை

இன்னும், ஆகாயம் முதலிய பஞ்ச பூதங்களினுடைய ரஜோ அம்சத்திலே பூதத்திற்கு ஒவ்வொரு மாத்திரை எடுத்துத் தனித்தனியே வைத்தது வாக்காதி கர்மேந்திரியம என்று சொல்லப்படும். இவைகளில் ஆகாயத்தின் இடமாக வாக்கு வசனிக்கும். வாயுவின் இடமாகப் பாணி இடுதல், ஏற்றல் செய்யும். அக்கினியின் இடமாகப் பாதம் நடக்கும். அப்புவின் இடமாகப் பாயுரு மல சலாதிகளை வெளியிலே தள்ளும். பிருத்வியின் இடமாக உபஸ்தம் சுகத்தைப் பண்ணும்.

இந்த ஐந்தும் தனித்தனியே இருந்து கொண்டு மறுதொழில் செய்ய மாட்டாது. வியானாதி வாயுக்கள் ஐந்து மாத்திரையும், ஒன்றாய்க் கூடினது கொண்டு, கர்மேந்திரியம் ஐந்தின் வழியினாலும் ஐந்து தொழில்களையும் செய்து முடிக்கும். இந்த வாயுக்கள் ஐந்தும், கர்மேந்திரியங்கள் ஐந்தும் ஆகப் பத்தும் ரஜோ அம்சம் ஆனபடியால் கிரியா சாதனம் ஆயின.

உரை

அடுத்ததாக சூட்சும பூதங்களின் ரஜோ அம்சத்தின் மற்றொரு பகுதியிலிருந்து பூதத்திற்கு ஒவ்வொரு பகுதி எடுத்துத் தனித்தனியே வைத்தபோது கர்மேந்திரியங்கள் உருவாகின்றன. ஆகாயத்தின் ரஜோ அம்சத்திலிருந்து பேசும் சக்தியான வாய் உருவாகிறது. வாயுவின் ரஜோ அம்சத்திலிருந்து இடுதல் ஏற்றல் செய்யும் சக்தியான கை உருவாகிறது. அக்கினியின் ரஜோ அம்சத்திலிருந்து நடக்கும் சக்தியான கால் உருவாகிறது. நீரின் ரஜோ அம்சத்திலிருந்து உடற்கழிவுகளை வெளியேற்றும் சக்தியான எருவாய் உருவாகிறது. பூமியின் ரஜோ அம்சத்திலிருந்து சிற்றின்பத்தை உருவாக்கும் சக்தியான கருவாய் தோன்றுகிறது.

எண்	கர்மேந்திரியம்	இடம்	தேவதை	தொழில்
1.	வாய்	வாய்	அக்கினி	பேசுதல்
2.	கை	கை	இந்திரன்	இடுதல், ஏற்றல்
3.	கால்	கால்	உபேந்திரன்	நடத்தல்
4.	எருவாய்	குதம்	எமன்	கழிவு நீக்கம்
5.	கருவாய்	குறி	பிரஜாபதி	சுகம் செய்தல்

இந்த ஐந்து இந்திரியங்களும் தத்தம் தொழில்களைச் செய்யுமே அல்லாது மற்றவற்றின் தொழில்களைச் செய்யாது. இவ்வாறு ஐம்பூதங்களின் ரஜோ அம்சத்திலிருந்து உருவான ஐந்து வாயுக்களும், ஐந்து கர்மேந்திரியங்களும் இணைந்த பத்தும், செயல்படுகிற சக்தியைத் தருவதால் இவை கிரியா சாதனம் ஆயின.

நூல்

சூட்சும சரீரத்தின் தன்மை

அந்தக்கரணம் ஐந்து, ஞானேந்திரியங்கள் ஐந்து, வாயுக்கள் ஐந்து, கர்மேந்திரியங்கள் ஐந்து என இருபது தத்துவங்களும் சூட்சும சரீரம் என்று சொல்லப்படும். இந்தச் சூட்சும சரீரத்தை மாயாப் பிரதிபிம்பனாக இருக்கிற ஈசுவரன், அவித்தையாப் பிரதிபிம்பராகிய சீவர்கள் அநேகர் ஆகையால் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சரீரமாகச் சிருஷ்டித்து அளித்தான். இப்படி சூட்சும சரீரக் கற்பனை சொல்லப்பட்டது.

உரை

ஐம்பூதங்களின் சத்துவ அம்சத்திலிருந்து உருவான அந்தக்கரணங்கள் ஐந்தும், ஞானேந்திரியங்கள் ஐந்தும், ரஜோ அம்சத்திலிருந்து உருவான வாயுக்கள் ஐந்தும், கர்மேந்திரியங்கள் ஐந்தும் ஆக மொத்தம் இருபது தத்துவங்களும் சேர்ந்து சூட்சும சரீரம் எனப்படும்.

இந்தச் சூட்சும சரீரத்தை மாயாப் பிரதிபிம்பப் பிரம்மத்தின் வடிவமாக இருக்கின்ற ஈசுவரன், அவித்தியாப் பிரதிபிம்பப் பிரம்மத்தின் வடிவமாக உள்ள பலப்பல சீவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனி உடலாகக் கொடுத்துள்ளான். இவ்வாறு சூட்சும சரீரக் கற்பனை சொல்லப்பட்டது.

நூல்

தூல பூதத்தின் தன்மை

இனி, தூலபூத உற்பத்தி சொல்லுகின்றோம். அஃது எங்ஙனம் எனின், தமோ அம்சமாய் இருக்கின்ற ஐந்து பூதங்களையும், ஒவ்வொன்றை இரண்டு இரண்டாகப் பகுத்து, முதற்பாதி ஐந்தையும் ஒவ்வொன்றை நான்கு நான்காகப் பகுத்து, இரண்டாம் பாதி ஐந்தில், தன் அம்சத்துடனே கூட்டாமல், மற்றை நான்கு பூதங்களுடன் அரைக்கால் மாத்திரையாகக் கொடுக்கின்றது பஞ்சீகரணம் என்று சொல்லப்படும்.

இப்படிப் பஞ்சீகரணம் பண்ணின தூல பூதங்களிலே, ஆகாயத்திலே பரிச, ரூப, ரஸ, கந்தம் ஆகிய நான்கு குணங்களும் வியாப்பியம் ஆனபடியால், அதிருசியமாய்ப் போக, நிசகுணமாகிய சத்தம் திருசியமாம். வாயுவிலே ரூப, ரஸ, கந்தம் ஆகிய மூன்று குணங்களும் வியாப்பியம் ஆனபடியால், அதிருசியமாப் போகக் காரண குணமாகிய சத்தமும், நிச குணமாகிய பரிசமும் திருசியமாம் அக்கினியிலே ரஸ, கந்தம் ஆகிய இரண்டு குணங்களும் வியாப்பியம் ஆனபடியினால் அதிருசியமாய்ப் போகக் காரண குணங்களாகிய சத்த பரிசமும் நிச குணமாகிய ரூபமும் திருசியமாம். அப்புவிலே கந்தகுணம் வியாப்பியம் ஆனபடியினால் அதிருசியமாய்ப் போகக் காரண குணங்களாகிய சத்த, பரிச, ரூபமும், நிசகுணமாகிய ரஸமும் திருசியமாம். பிருத்வியிலே காரண குணங்களாகிய சத்த, பரிச, ரூபமும், நிசகுணமாகிய கந்தமும் திருசியமாம்.

உரை


சூட்சும பூதங்களின் தமோகுண அம்சத்திலிருந்து பஞ்சிகரணம் செய்யப்பட்ட ஐந்து தூல பூதங்கள் தோன்றுகின்றன.

பஞ்சீகரணம் என்பது என்னவெனில் ஐம்பூதங்களின் தமோ அம்சம் ஒவ்வொன்றையும் இரண்டு பகுதியாகப் பிரித்து, அதில் இரண்டாம் பாதியைத் தனியாக வைக்க வேண்டும். முதல் பாதியை நான்கு பகுதியாகப் பிரிக்க வேண்டும். பின்னர் தனியாக வைக்கப்பட்ட ஒவ்வொரு இரண்டாம் பாதியுடன், முதல் பாதி மற்ற நான்கு பூதங்களின் அரைக்கால் பாகத்தைச் சேர்க்க வேண்டும்.

எந்தப் பூதத்திற்கான பஞ்சீகரணச் சேர்க்கை நடைபெறுகிறதோ அந்தப் பூதத்தின் அரைக்கால் பகுதியை, இரண்டாம் பாதியுடன் சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை. விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

ஆகாயம்	ஆ	வா	அக்	நீர்	பூமி	ஆகாயம்
வாயு	ஆ	வா	அக்	நீர்	பூமி	வாயு
அக்கினி	ஆ	வா	அக்	நீர்	பூமி	அக்கினி
நீர்	ஆ	வா	அக்	நீர்	பூமி	நீர்
பூமி	ஆ	வா	அக்	நீர்	பூமி	பூமி

இப்படிப் பின்னமாக்கிக் கூடிக் கலந்த பூதங்கள் பஞ்சீகரணம் செய்யப்பட்ட பூதங்கள் எனப்படும். ஆகாயத்தின் பஞ்சீகரணச் சேர்க்கை படத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது.



இப்படிப் பஞ்சீகரணம் செய்யப்பட்ட பூதங்கள் கண்ணிற்குப் புலப்படும்படியாகவும் உணரக் கூடியவையாகவும் இருக்கும். இவை தூல பூதங்கள் என அழைக்கப்படும்.

முதலில் ஆகாயம் அதிகமாக உள்ள பூதத்தில் ஆகாயத்தின் குணமான சத்தம் மட்டும் வெளிப்படக்கூடியதாக இருக்கும். மற்ற பூதங்களின் குணங்களான பரிசம், ரூபம், சுவை, மணம் ஆகிய நான்கும் மறைந்திருக்கும்.

வாயு அதிகமாக உள்ள பூதத்தில் ஆகாயத்தின் குணமான சத்தமும், வாயுவின் குணமான பரிசமும் மற்ற பூதங்களின் குணங்களான ரூபமும், சுவையும், மணமும் மறைந்து இருக்கும்.

அக்கினி அதிகமாக உள்ள பூதத்தில் ஆகாயத்தின் குணமான சத்தமும், வாயுவின் குணமான பரிசமும் அக்கினியின் குணமான ரூபமும் வெளிப்படக்கூடியதாக இருக்கும். மற்ற இரண்டு பூதங்களின் குணங்களான சுவையும், மணமும் மறைந்து இருக்கும்.

நீர் அதிகமாக உள்ள பூதத்தில் ஆகாயத்தின் குணமான சத்தமும், வாயுவின் குணமான பரிசமும், அக்கினியின் குணமான ரூபமும், நீரின் குணமான சுவையும் வெளிப்படக் கூடியதாக இருக்கும். மற்ற பூதமான பூமியின் குணமாகிய மணம் மட்டும் மறைந்து இருக்கும்.

பூமி அதிகமாக உள்ள பூதத்தில் ஆகாயத்தின் குணமான சத்தமும், வாயுவின் குணமான பரிசமும் அக்கினியின் குணமான ரூபமும், நீரின் குணமான சுவையும் பூமியின் குணமான மணமும் என ஐந்து குணங்களுமே வெளிப்படக் கூடியனவாக இருக்கும். இப்படியாகத் தூல பூதங்கள் ஐந்தின் தோற்றங்களும் அவற்றின் குணங்களும் விவரிக்கப்பட்டன.

நூல்

தூல சரீரத்தின் தன்மை

முன் சூட்சும பூதங்களினின்றும் சூட்சும சரீரங்கள் தோன்றினாற் போலப் பஞ்சீகரணம் பண்ணின தூல பூதங்களினின்றும், ஆறு தத்துவமாய், நால்வகைப் பிறப்பாய், மூவகைச் சாதியாய் இருக்கின்ற தூல சரீரங்கள் தோன்றின. இவற்றுள் ஆறு தத்துவங்களாவன: சர்மம், உதிரம், மாமிசம், சனாயு, அத்தி, மஜ்ஜை என்னும் இவைகளாம். நால்வகைத் தோற்றங்களாவன: சராயுஜம், அண்டஜம், சுவேதஜம், உத்பிஜ்ஜம் என்னும் இவைகளாம். மூவகைச் சாதிகளாவன: இகலோக, பரலோக புத்தி இருவகையும் கொடுக்கின்ற மானுட சரீரம் உத்தம ஜாதி. பரலோக புத்தியை மறைத்து, இகலோக புத்தியை மாத்திரம் கொடுக்கின்ற பசு, பட்சி முதலானவை மத்திம ஜாதி, இரண்டுலோக புத்தியையும்

மறைத்திருக்கின்ற மரம், செடி, கொடி முதலியவை அதமசாதி. இப்படிப் பிருத்வி தத்துவமாய் இருக்கின்ற பூலோகத்தில் கண்டாற்போல, அப்பு, அக்கினி, வாயு, ஆகாயம் எனப்பட்ட தத்துவங்களாய், நிரை நிரையே இருக்கின்ற பிதிர்லோகம், தேவலோகம், யட்ச, கந்தர்வ, சித்தர் லோகங்களிலும், நட்சத்திரமாகத் தோற்றுகின்ற சந்திரன் முதலான பிதிர்க்கள், சூரியன் முதலான தேவதைகள், கந்தர்வர் சித்தர் எனப்பட்டவர்கள் உத்தமசாதி, காமதேனு ஐராவதம், அன்னம், கருடன் முதலானவை மத்திமசாதி, கற்பக விருட்சம், பாரிசாதம் முதலானவை அதம சாதி.

உரை

முன்னர் சூட்சும பூதங்களில் இருந்து சூட்சும சரீரம் தோன்றியதைப்போலப் பஞ்சீகரணம் செய்யப்பட்ட தூல பூதங்களிலிருந்து அறுவகைத் தத்துவங்களாக, நால்வகைப் பிறப்புகளாக, மூவகைச் சாதிகளாகத் தூல சரீரங்கள் தோன்றின.

ஆறு தத்துவங்களாவன:

தோல், ரத்தம், தசை, நரம்பு, எலும்பு, மஜ்ஜை ஆகியன.

நால்வகைப் பிறப்புகளாவன:

கருப்பத்தின் வழிப் பிறப்பவைகளான (சராயுஜம்) மனிதன் விலங்கு முதலியன. முட்டை வழிப் பிறப்பவைகளான (அண்டஜம்) பறவைகள் முதலியன. வியர்வை வழிப் பிறப்பவைகளான (சுவேதஜம்) பேன்கள் முதலியன. விதை முதலியவற்றின் வழி உருவாகுபவையான (உத்பிஜ்ஜம்) தாவரங்கள் முதலியன.

மூவகைச் சாதிகளாவன:

இம்மை, மறுமை இரண்டுக்கும் பயன்தரக்கூடிய செயல்களைச் செய்து வீடுபேறு அடையக்கூடிய உயிரான மனிதன் உத்தமசாதி. இம்மையில் மட்டுமே பயன்தரக்கூடிய உண்டு வாழ்தல், இனவிருத்தி செய்தல் ஆகிய செயல்களைச் செய்யும் விலங்குகளும் பறவைகளும் மத்திமசாதி. இம்மை மறுமை இரண்டிற்கும் பயன்தரக்கூடிய செயல்கள் வெளிப்படாமல் இருக்கும் தாவரங்கள் அதமசாதி.

பூமியின் தத்துவமாக இருக்கும் இந்தப் பூவுலகத்தில் உள்ளது போலவே, நீரின் தத்துவமாக இருக்கும் பிதிர்லோகத்திலும் அக்கினியின் தத்துவமாக இருக்கும் தேவலோகத்திலும், வாயுவின் தத்துவமாக இருக்கும் யட்ச, கந்தவர்வ லோகத்திலும், ஆகாயத்தின் தத்துவமாக இருக்கும் சித்தர் லோகத்திலும் மூவகைச் சாதிகள் உண்டு.

அவ்வுலகங்களில் பிதிர்க்களாகிய நம்முடைய முன்னோர்கள், சூரியன் முதலிய தேவதைகள், கந்தர்வர்கள், சித்தர்கள் ஆகியோர் உத்தமசாதி. எல்லா வளமும் அருளும் பசுவான காமதேனு, இந்திரனின் பட்டத்து யானையான ஐராவதம். பிரம்மாவின் வாகனமான அன்னப்பறவை, திருமாலின் வாகனமான கருடன், சிவபெருமானின் வாகனமான ரிஷபம் முதலியவை மத்திமசாதி, கற்பக விருட்சம், பாரிசாத மரம் போன்றவை அதமசாதி.

நூல்

மூவகைச் சரீரங்களும் ஐவகை கோசங்களும்

இந்தத் தூல சரீரமே அன்னமய கோசம். சூட்சும சரீரம் மூன்று கோசங்களாய் இருக்கும். அஃது எங்ஙனம் எனின், பிராணவாயுவும், கர்மேந்திரியங்களும் கூடிப் பிராணமய கோசம். மனதும் ஞானேந்திரியங்களும் கூடி மனோமய கோசம். புத்தியும் ஞானேந்திரியங்களும் கூடி விஞ்ஞானமய கோசம். காரண சரீரமே ஆனந்தமய கோசம். இப்படிப் பஞ்சகோசங்கள் சொல்லப்பட்டன.

உரை

சீவர்கள், தூலசரீரம், சூட்சும சரீரம், காரண சரீரம் என்னும் மூவகைச் சரீரங்களாகவும், அன்னமயகோசம், மனோமய கோசம், பிராணமயகோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமயகோசம் என ஐந்துவகைக் கோசங்களாகவும் உள்ளனர்.

இவற்றுள் மேற்சொல்லப்பட்ட தூலசரீரம் ஒரு கோசத்தை மட்டுமே உடையது. அது உணர்வாலே இயங்கும் அன்னமய கோசம் ஆகும்.

சூட்சும சரீரம் மூன்று கோசங்களை உடையது. அவையாவன: பிராணவாயுவும் கர்மேந்திரியங் களும் கூடிய பிராணமயகோசம், மனமும் ஞானேந்திரியங்களும் கூடிய மனோமயகோசம். புத்தியும் ஞானேந்திரியங்களும் கூடிய விஞ்ஞான மயகோசம் ஆகியனவாகும்.

காரண சரீரமே ஆனந்தமய கோசமாகும். தூல சரீரமும் சூட்சும சரீரமும் தோன்றுவதற்குக் காரணமானதால் காரண சரீரமாகும். பிடித்த

விஷயங்களைப் பார்ப்பதால், அடைவதால், அனுபவிப்பதால் ஏற்படும் அனைத்திற்கும் காரணமாக இருப்பதால் ஆனந்தமயகோசம் ஆகும். இவ்வாறு மூவகைச் சரீரங்களும் ஐந்துவகைக் கோசங்கள் பற்றியும் கூறப்பட்டது.

நூல்

தூல சரீரத்தில் சூட்சுமசரீரம் இருக்கும் வகை

ஆறு தத்துவங்களாய் இருக்கின்ற தூல சரீரத்தில், இருபது தத்துவங்களாய் இருக்கின்ற சூட்சும சரீரம் இருக்கிறது. அஃது எப்படி எனின், கர்மேந்திரியங்களுள் வாக்கும், ஞானேந்திரியங்களுள் சிங்நுவையும் வாயில் இருக்கும். உதானவாயுவும் மனதும் கண்டத்தில் இருக்கும். பிராணவாயுவும் புத்தியும் இருதயத்தில் இருக்கும். சமானவாயுவும் சித்தமும் நாபியில் இருக்கும். அபான வாயுவும்பாயுருவும் குதத்தில் இருக்கும்.

வியானவாயுவும், ஞானேந்திரியங்களில் துவக்கும், அகங்காரமும் சர்வாங்கமும் வியாபித்திருக்கும். உச்சியிலே உள்ளமும், கருவிழி நுனியிலே சட்சு இந்திரியமும், காதிற்குள்ளே சுரோத்ரேந்திரியமும், மூக்கு நுனியிலே கிராணேந்திரியமும், கழுத்திற்கு மேலே தனித்தனியே இருக்கும். கழுத்திற்குக் கீழே கை, கால், குய்யங்களில் பாணி, பாதம், உபஸ்தம் மூன்றும் தனித்தனியே இருக்கும். இப்படித் தூல சரீரத் தத்துவங்கள் ஆறு, அதில் குடிபுகுந்த சூட்சும சரீரத் தத்துவங்கள் இருபது. ஆகத் தத்துவங்கள் இருபத்தாறும், பஞ்ச பூதங்களின் காரியம் ஆனபடியினாலே ஒருமைப்பாடாகக் காரிய சரீரம் என்று சொல்லப்படும்.

உரை

ஆறு தத்துவங்களாக இருக்கிற தூல சரீரத்தில் இருபது தத்துவங்களாக இருக்கிற சூட்சும சரீரம் இடம் பெற்றுள்ளது.

வாக்கும், நாக்கும் வாயில் இருக்கும். உதான வாயுவும் மனமும் கழுத்தில் இருக்கும். பிராணவாயுவும் புத்தியும் இதயத்தில் இருக்கும். சமானவாயுவும் சித்தமும் நாபியில் இருக்கும். அபானவாயுவும் எருவாயும் குதத்தில் இருக்கும். வியானவாயுவும், தோலும், அகங்காரமும் உடல் முழுவதும் இருக்கும்.

உள்ளம் தலை உச்சியில் இருக்கும்.

கண் கருவிழி நுனியில் இருக்கும்.

காது காதிற்கு உள்ளே இருக்கும்

மூக்கு மூக்கு நுனியில் இருக்கும்.

கை, கால், கருவாய் முதலிய சூட்சும சரீரத் தத்துவங்கள் கை, கால், கருவாய் ஆகிய தூல உடல் உறுப்புகளில் இருக்கும்.

இவ்வாறு தூல சரீரத் தத்துவங்கள் ஆறும், அவற்றில் குடிபுகுந்த சூட்சுமசரீரத் தத்துவங்கள் இருபதும் சேர்ந்து மொத்தம் இருபத்தாறு தத்துவங்களும் பஞ்சபூதங்களின் காரியம் ஆனபடியால் இவை காரிய சரீரம் என்று சொல்லப்படும்.

நூல்

சீவர்களின் மூன்று சரீரங்களும் அவத்தைகளும்

அவித்தையில் பிரதி பிம்பித்த சிதாபாசன், சாக்கிரத்திலே இந்த இருபத்தாறு தத்துவங்களுடனே கலந்து நின்றபோது விசுவன் என்றும், வியாவகாரிக சீவன் என்றும் சொல்லப்படுவன். சொப்பனத்திலே தூல சரீரத்தைவிட்டு, அந்தக்கரணத்துடன் கூடி நின்றபோது தைஜசன் என்றும், பிராதிபாதிக சீவன் என்றும் சொப்பன கற்பிதன் என்றும் சொல்லப்படுவன். சுழுத்தியிலே காரிய சரீரத் தத்துவங்கள் இருபத்தாறையும் கைவிட்டுக் காரண சரீரத்தை மாத்திரம் பொருந்தி இருக்கும்போது பிராக்ஞன் என்றும் பாரமார்த்திக சீவன் என்றும் சொல்லப்படுவன்.

பிரம்ம சைதன்யமும் சாக்கிரத்திற்குச் சாட்சியாய் இருக்கும்போது சீவாத்மா என்றும், சொப்பனத்திற்குச் சாட்சியாய் இருக்கும்போது அந்தராத்மா என்றும், சுழுத்திக்குச் சாட்சியாய் இருக்கும்போது பரமாத்மா என்றும், அவத்தாத்திரய சாட்சியாய் இருக்கும்போது ஞானாத்மா என்றும் கூடஸ்தன் என்றும் சொல்லப்படும். இப்படிச் சீவனுக்கு மூன்று சரீரங்களும் மூன்று அவத்தைகளும் சொல்லப்பட்டன.

உரை

அவித்தையின் காரணமாக இவ்வுலகில் தோன்றிய அனைத்துச் சீவர்களும் விழிப்புநிலை (சாக்கிரம்) கனவுநிலை (சொப்பனம்) உறக்கநிலை (சுழுத்தி) என்ற மூன்று நிலைகளை அனுபவிப்பார்கள். இவற்றை அவஸ்தைகள் என்று வேதாந்த நூல்கள் கூறுகின்றன.

விழிப்பு நிலையில் உள்ள சீவன் 26 தத்துவங்களைக் கொண்டு செயலாற்றிக் கொண்டு இருப்பான். அப்போது அவன் விசுவன் என்றும் வியாவகாரிக சீவன் என்றும் அழைக்கப்படுவான்.

கனவுநிலையில் இந்த 26 தத்துவங்களும் செயல்படாமல் - தூல உடலை இயக்கும் தத்துவங்களை ஒதுக்கி, சீவன் அந்தக்கரணங்கள் ஐந்துடனும் கூடிச் செயலாற்றும் காலத்தில் தைஜசன் என்றும் பிராதிபாதிக சீவன் என்றும் சொப்பன கற்பிதன் என்றும் அழைக்கப்படுவான்.

தூல சரீரமும் சூட்சும சரீரமும் ஒடுங்கிக் காரண சரீரம் மட்டும் செயல்படும் உறக்க நிலையில் சீவன், பிராக்ஞன் என்றும் பாரமார்த்திக சீவன் என்றும் அழைக்கப்படுவான்.

அவத்தை	சரீரம்	தத்து வங்கள்	பெயர்	தொழில்
சாக்கிரம்	தூலம்	26	விசுவன்	வியாவகாரிக சீவன்
சொப்பனம்	சூட்சுமம்	20	தைஜசன்	பிராதிபாசிக சீவன்
சுழுத்தி	காரணம்	1	பிராக்ஞன்	பாரமார்த்திக சீவன்

பிரம்ம சைதன்யமும் சீவனின் விழிப்பு நிலையில் சாட்சியாக உள்ளபோது சீவாத்மா என்றும், கனவு நிலையில் சாட்சியாக உள்ளபோது அந்தராத்மா என்றும், உறக்க நிலையில் சாட்சியாக உள்ளபோது

பரமாத்மா என்றும் மூன்று நிலைகளுக்கும் சாட்சியாக உள்ளபோது ஞானாத்மா என்றும் அழைக்கப்படும். இம்மூன்று நிலைகளிலும் சாட்சியாக இருந்துகொண்டு எவ்வித மாறுதலும் இல்லாமல் இருப்பதால் இது கூடஸ்தன் என்றும் சொல்லப்படும்.

நூல்

ஈசுவரனுக்கு மூன்று சரீரங்களும் அவத்தைகளும்

இனி, ஈசுவரனுக்கு மூன்று சரீரங்களும் மூன்று அவத்தைகளும் சொல்லும்படி, கற்பிதப் பிரபஞ்ச வடிவமாகத் தோற்றுகின்ற தூல பஞ்ச பூதங்களும், அந்தப் பூதங்களிலே தோன்றிய மூன்று சாதியாய் இருக்கின்ற தூல சரீர சமஷ்டியும் கூடி, ஈசுவர தூல சரீரம் என்றும், விராட் என்றும் சொல்லப்படும் இதனுடனே கூடிச் சாக்கிராவத்தையைப் பொருந்துகின்ற ஈசுவரன், வைசுவானரன் என்றும், இந்த இருவகைக்கும் அதிஷ்டான பிரம்ம சைதன்யம் பிரம்மா என்றும் சொல்லப்படும்.

சூட்சும பூதங்கள் ஐந்தும் அந்தப் பூதங்களிலே தோன்றிய சூட்சும சரீர சமஷ்டியும் கூடி ஈசுவர சூட்சும சரீரம் என்றும், இரண்யகர்ப்பன் என்றும் சொல்லப்படும். இதனுடனே கூடிச் சொப்பனாவத்தையைப் பொருந்துகின்ற ஈசுவரன் சூத்திராத்மா என்றும், இந்த இருவகைக்கும் அதிஷ்டான சைதன்யம் விஷ்ணு என்றும் சொல்லப்படும்.

இந்தத் தூலம், சூட்சுமம் இரண்டின் வாசனையுடனே கூடியிருக்கின்ற மாயை, ஈசுவர காரண சரீரம் என்றும், அவ்வியாகிருதம் என்றும்

சொல்லப்படும். இதனுடனே கூடிச் சுழுத்தி அவத்தையைப் பொருந்துகின்ற ஈசுவரன், அந்தர்யாமி என்றும், இந்த இருவகைக்கும் அதிஷ்டான சைதன்யம் உருத்திரன் என்றும் சொல்லப்படும்.

சீவன் தன் மூன்று அவத்தைகளிலும், தன் மூன்று சரீரங்களாயிருக்கின்ற இருபத்தேழு தத்துவங்களுடனும் நான் என்று கலந்து நிற்கின்றதுபோல, ஈசுவரனும் தன் மூன்று அவத்தையிலும் தன் மூன்று சரீரங்களாய் இருக்கின்ற முப்பத்து இரண்டு தத்துவங்களுடனும் கலந்து நிற்பன்.

ஆகையினாலே சீவ சிதாபாசன் தன் சரீர மாத்திரமே கலந்து நிற்பன். ஈசுவரன் தன் சரீரமாகிய சகல சரீரங்களோடும் சகல பிரபஞ்சங்களோடும் கலந்து நிற்பன். இந்த இருவகைக்கும் சாட்சியாய் இருக்கின்ற பிரம்ம சைதன்யமும், சகல சரீரங்களிலும் சகல பிரபஞ் சங்களிலும் நிறைந்து, அப்பாலும் பத்துத் திக்கையும் அதிக்கிரமித்து எல்லையற்று இருக்கும்.

உரை

சீவர்களுக்கு மூன்று சரீரங்களும் மூன்று அவத்தைகளும் கூறப்பட்டதுபோல ஈசுவரனுக்கும் மூன்று சரீரங்களும் மூன்று அவத்தைகளும் சொல்லப்பட்டுள்ளன.

தூல பூதங்கள் ஐந்தும் அப்பூதங்களில் தோன்றிய தூல சரீர சமஷ்டியும் சேர்ந்ததே ஈசுவரனின் தூல சரீரமாகும். சமஷ்டி என்றால் பன்மை; சேர்ந்து உள்ளது என்பது பொருள். வியஷ்டி என்றால் ஒருமை, தனியாக உள்ளது என்பது பொருள். உதாரணமாக, மாந்தோப்பு என்பது சமஷ்டி; மாமரம் என்பது வியஷ்டி.

ஈசுவரனின் தூல சரீரம் விராட் என்று சொல்லப்படும். இந்த விராட்டுடன் கூடிச் சாக்கிர அவத்தையைப் பொருந்தும் ஈசுவரன் வைசுவானரன் என்று சொல்லப்படும். இந்த இருவகைக்கும் அடிப்படையாக உள்ள சைதன்யம் பிரம்மா ஆகும்.

சூட்சும பூதங்கள் ஐந்தும் அந்தப் பூதங்களில் இருந்து தோன்றிய சீவர்களின் சூட்சும சரீர சமஷ்டியும் சேர்ந்து ஈசுவர சூட்சும சரீரம் அல்லது இரண்ய கர்ப்பன் என்று சொல்லப்படும். இந்த இரண்ய கர்ப்பனுடன் கூடிச் சொப்பன அவத்தையைப் பொருந்தும் ஈசுவரன் சூத்திராத்மா என்று சொல்லப்படுவான். இந்த இரண்டு வகைக்கும் அடிப்படையான சைதன்யம் விஷ்ணு ஆகும்.

இந்த ஈசுவர தூல சரீரம், ஈசுவர சூட்சும சரீரம் ஆகிய இரண்டின் வாசனையுடன் கூடிய மாயையே ஈசுவர காரண சரீரம் என்றும் அவ்வியாகிருதம் என்றும் சொல்லப்படும். இந்த அவ்வியாகிருதத்துடன் கூடிச் சுழுத்தி அவத்தையைப் பொருந்தும் ஈசுவரன் அந்தர்யாமி என்று சொல்லப்படுவான். இந்த இருவகைக்கும் அடிப்படையான சைதன்யம் உருத்திரன் ஆகும்.

அவத்தை	சரீரம்	பெயர்	அபிமானி	அதிஷ்டானம்
சாக்கிரம்	தூலம்	விராட்	வைசுவானரன்	பிரம்மன்
சொப்பனம்	சூட்சுமம்	இரண்ய கர்ப்பன்	சூத்திராத்மா	விஷ்ணு
சுழுத்தி	காரணம்	அவ்வியா கிருதம்	அந்தரியாமி	உருத்திரன்

சீவன் தன் மூன்று அவத்தையிலும் மூன்று சரீரங்களுக்குள் இருக்கும் இருபத்தேழு தத்துவங்களுடன் நான் என்று கலந்து நிற்கும்.

தூலசரீரத் தத்துவங்கள்	6
சூட்சும சரீரத் தத்துவங்கள்	20
காரண சரீரத் தத்துவங்கள்	1
மொத்தம்	27

சீவனைப் போலவே ஈசுவரனும் தன் மூன்று அவத்தையிலும் தன் மூன்று சரீரங்களாக இருக்கும் முப்பத்து இரண்டு தத்துவங்களுடனும் கலந்து நிற்பன்.

சமஷ்டி தூலசரீரத் தத்துவங்கள்	6
சமஷ்டி சூட்சும சரீரத் தத்துவங்கள்	20
காரண சரீரத் தத்துவம்	2
பஞ்ச பூதங்கள்	5
	32

சீவன் தன் சரீரத்தில் மட்டுமே கலந்து நிற்பான். ஈசுவரன் தன் சரீரமாகிய சகல சரீரங்களிலும் சகல பிரபஞ்சங்களோடும் கலந்து நிற்பான்.

இந்த இரண்டு வகைக்கும் சாட்சியாக இருக்கும் பிரம்ம சைதன்யமானது சகல சரீரங்களோடும் சகல பிரபஞ்சங்களிலும் நிறைந்து அவற்றிற்கு அப்பாலும் பத்துத் திசைகளிலும் நீக்கமற நிறைந்திருக்கும்.

தத்துவங்களின் தோற்றமும் நிலையும்

சீவனுக்குத் தூல சரீர வியவகாரத்திற்கு, அன்னமயமான சட்கோச தத்துவங்கள் - 6, சூட்சும சரீரத் தத்துவங்கள் - 20, சீவன், ஈசுவரன், அவித்தை,

வித்தை, பிரம்மம் - 5, ஆகத் தத்துவங்கள் - 31. சூட்சும சரீர வியவகாரத்திற்கு, சூட்சும சரீரத் தத்துவங்கள் - 20, சீவன், ஈசுவரன் அவித்தை, வித்தை பிரம்மம் - 5, ஆகத் தத்துவங்கள் - 25. காரண சரீர வியவகாரத்திற்கு, சீவன், ஈசுவரன் அவித்தை, வித்தை, பிரம்மம் ஆகத் தத்துவங்கள் - 5, சீவ வியவகாரத்திற்கு, சீவன், ஈசுவரன், பிரம்மம் ஆகத் தத்துவங்கள் - 3, சாட்சி வியவகாரத்திற்கு சீவன் சாட்சி - 1 மட்டுமே.

ஈசுவரனுக்குத் தூல சரீர வியவகாரத்திற்கு, சமஷ்டி அன்னமய கோசத் தத்துவங்கள் - 6, சமஷ்டி சூட்சும சரீரத் தத்துவங்கள் 20, சமஷ்டி சீவன் அவித்தை - 2, ஈசுவரன், வித்தை, பிரம்மம் - 3, தூல பூதங்கள் - 5, ஆகத் தத்துவங்கள் - 36. சூட்சும சரீர வியவகாரத்திற்கு, சமஷ்டி சூட்சும சரீரத் தத்துவங்கள் - 20, சமஷ்டி சீவன், அவித்தை - 2, சூட்சும பூதங்கள் - 5, வித்தை, ஈசுவரன், பிரம்மம் - 3, ஆகத் தத்துவங்கள் - 30. காரண சரீர வியவகாரத்திற்கு வித்தை, ஈசுவரன், பிரம்மம் ஆகத் தத்துவங்கள் - 3. ஈசுவர வியவகாரத்திற்கு ஈசுவரன், பிரம்மம் ஆகத் தத்துவங்கள் -2, பிரம்ம வியவகாரத்திற்கு, பிரம்மம் ஒன்று மட்டுமே.

இந்திரிய வியவகாரத்திற்கு இந்திரியம் - 1, சட்கோசத் தத்துவங்கள் - 6, அந்தக்கரணம் - 5, வாயுக்கள், சீவன், ஈசுவரன், அவித்தை, வித்தை, பிரம்மம் - 5, ஆகத் தத்துவங்கள் - 22. மனோராச்சிய வியவகாரத்திற்கு அந்தக்கரணம் - 5, சீவன், ஈசுவரன், அவித்தை, வித்தை பிரம்மம் - 5, ஆகத் தத்துவங்கள் - 10. இப்படித் தத்துவங்களின் தோற்றமும் நிலையும் சொல்லப்பட்டன.

உரை

சீவன் தூல சரீரத்தோடு சாக்கிர அவத்தையில் செய்யும் பணிகளுக்கு 31 தத்துவங்கள் அவசியமாகின்றன.

தூல சரீரத் தத்துவங்கள்	6
சூட்சும சரீரத் தத்துவங்கள்	20
சீவன், ஈசுவரன், அவித்தை, வித்தை, பிரம்மம்	5
	31

சீவன் சூட்சும சரீரத்தோடு சொப்பன அவத்தையில் செய்யும் பணிகளுக்கு 25 தத்துவங்கள் அவசியமாகின்றன.

சூட்சும சரீரத் தத்துவங்கள்	20
சீவன், ஈசுவரன், அவித்தை, வித்தை, பிரம்மம்	5
	25

சீவன் காரண சரீரத்தோடு சுழுத்தி அவத்தையில் செய்யும் பணிகளுக்கு 5 தத்துவங்கள் அவசியமாகின்றன.

சீவன், ஈசுவரன் அவித்தை, வித்தை, பிரம்மம் -5

சீவன் தனது உண்மை வடிவமான கூடத்தனை அறிந்து கொள்வதற்கு 3 தத்துவங்கள் அவசியமாகின்றன.

சீவன், ஈசுவரன், பிரம்மம் - 3

சாட்சியாக இருப்பதற்குப் பிரம்ம தத்துவம் ஒன்று மட்டுமே அவசியமானது.

சீவனைப்போலவே ஈசுவரன் தூல சரீரத்தோடு சாக்கிர அவத்தையில் செயல்படுவதற்கு 36 தத்துவங்கள் அவசியமாகின்றன.

சமஷ்டி தூல சரீரத் தத்துவங்கள்	6
சமஷ்டி சூட்சும சரீரத் தத்துவங்கள்	20
சமஷ்டி சீவன், அவித்தை	2
தூல பூதங்கள்	5
ஈசுவரன், வித்தை, பிரம்மம்	3
	36

ஈசுவரன் சூட்சும சரீரத்தோடு சொப்பன அவத்தையில் செயல்படுவதற்கு 30 தத்துவங்கள் அவசியமாகின்றன.

சமஷ்டி சூட்சும சரீரத் தத்துவங்கள்	20
சமஷ்டி சீவன், அவித்தை	2
சூட்சும பூதங்கள்	5
ஈசுவரன், வித்தை பிரம்மம்	3
	30

ஈசுவரன் காரண சரீரத்தோடு சுழுத்தி அவத்தையில் செயல்படுவதற்கு அவசியமாகும் தத்துவங்கள் 2 ஆகும்.

ஈசுவரன், பிம்பம் - 2

சாட்சியாக இருப்பதற்குப் பிரம்மத் தத்துவம் ஒன்று மட்டுமே அவசியமாகிறது.

இந்திரியங்கள் செயல்படுவதற்கு 22 தத்துவங்கள் அவசியமாகின்றன.

இந்திரியம் (ஏதேனும் ஒன்று)	1
தூல சரீரத் தத்தவங்கள்	6
அந்தக் கரணங்கள்	5
வாயுக்கள்	5
சீவன், ஈசுவரன், அவித்தை, வித்தை, பிரம்மம்	5
	22

மனோராச்சியம் செயல்படுவதற்கு 10 தத்துவங்கள் அவசியமாகின்றன.

அந்தக்கரணங்கள்	5
சீவன், ஈசுவரன், அவித்தை, வித்தை, பிரம்மம்	5
	10

இவ்வாறு தத்துவங்களின் தோற்றமும் நிலையும் சொல்லப்பட்டன.

தத்துவங்களின் ஒடுக்கம்

இனித் தத்துவங்கள் ஒடுங்குகின்ற முறை சொல்லுகின்றோம். சகல சீவரிடத்திலும் இருக்கின்ற தூல சரீரங்கள் அனைத்தும் தமக்கு ஆதாரமான தூல பூதங்களிலே மடிந்து பூதம் மாத்திரமாக ஒடுங்கும். இந்தத் தூல பூதங்களும் பஞ்சீகரணம் விட்டுத் தன்மாத்திரைகளான தமோகுண பூதங்களாக மிஞ்சும். அப்போது கேவலம் இரண்யகர்ப்ப அவத்தை என்று சொல்லப்படும்.

சூட்சும சரீரத் தத்துவங்கள் இருபதும் கட்டுவிட்டுப் பூதங்களினுடைய சத்துவ குணமும், ரஜோ குணமுமாக ஒடுங்கும். அஃது எங்ஙனம் எனின், சகல பிராணிகளிடத்திலும் இருக்கின்ற அகங்காரமும் கிராணேந்திரியமும், உதான வாயுவும், உபஸ்த இந்திரியமும் பிருத்வியில் ஒடுங்கும். சித்தமும் சிங்நுவையும், சமானமும் பாயுருவும் அப்புவில் ஒடுங்கும். புத்தியும் சட்சுவும் அபானனும் பாதமும் அக்கினியில் ஒடுங்கும். மனமும், துவக்கும், பிராணனும், பாணியும் வாயுவில் ஒடுங்கும். உள்ளமும், சுரோத்திரமும், வியானனும், வாக்கும் ஆகாயத்தில் ஒடுங்கும். அப்போது பழையபடியே முக்குண பூதங்களாகும்.

இந்தச் சூட்சும பூதங்களும், பிருத்வி அப்புவில் கரைந்து ஒடுங்கும். அப்புவும் அக்கினியில் சுவறி

ஒடுங்கும். அக்கினியும் விளக்குப்போல வாயுவில் அணைந்து ஒடுங்கும். வாயுவும் ஆகாயத்தில் ஒய்ந்து ஒடுங்கும். ஆகாயமும் விட்சேப சக்தியில் ஒடுங்கும். ஆவரண சக்தியும் விட்சேப சக்தியும் மூலப் பிரகிருதியின் தமோ குண மாத்திரமாய், ஆலமரம், ஆலம் விதையில் ஒடுங்கினாற்போல, இன்னும் ஒரு சிருஷ்டிக்கு வித்தாக அவித்தையிலும் மாயையிலும் ஒடுங்கும்.

இந்த அவித்தையும் மாயையும் அதிநுண்மையான மூலப் பிரகிருதி என்று சொல்லப்பட்ட விந்து தத்துவத்தில் ஒடுங்கும். அந்த விந்துவும், பாம்பு என்கின்ற பெயர் போய்ப் பழுதையாய்க் கண்டாற்போலத் தனக்கு அதிஷ்டான சைதன்யமான பிரம்ம சைதன்ய மாத்திரமாக ஒடுங்கும்.

இப்படிப் பொய்யெல்லாம் மெய்ப்பொருள் ஒன்றாகக் கண்டு, அதுவே சுபாவ சித்தமாய் நிசமாயிருக்கின்ற தன் வடிவு எனக் கண்டு தெளிந்து, கவலை கெட்டு இருக்கிறவனே சீவன் முக்தன். இப்படித் தத்துவங்களின் ஒடுக்கம் சொல்லப்பட்டது.

உரை

அனைத்துச் சீவரிடத்தும் உள்ள தூல சரீரங்கள் தமக்கு அடிப்படையான தூல பூதங்களில் ஒடுங்கும். தூல பூதங்கள் பஞ்சீகரணம் விட்டுச் சூட்சும பூதங்களாகத் தமோ குணத்தில் ஒடுங்கும்.

சூட்சும சரீரத் தத்துவங்கள் இருபதும் கட்டுவிட்டு அவை தோன்றிய சூட்சும பூதங்களின் சத்துவ குணத்திலும் ரஜோ குணத்திலும் ஒடுங்கும். அது எவ்வாறெனில்,

பூமியின் சத்துவ குண அம்சத்தில் அகங்காரமும், முகரும் சக்தியான மூக்கும் ஒடுங்குகின்றன. ரஜோகுண அம்சத்தில் உதான வாயுவும் சிற்றின்பம் அனுபவிக்கும் சக்தியான கருவாயும் ஒடுங்குகின்றன.

நீரின் சத்துவ குண அம்சத்தில் சித்தமும் சுவைக்கும் சக்தியான நாக்கும் ஒடுங்குகின்றன. ரஜோ குண அம்சத்தில் சமான வாயுவும் கழிவுகளை வெளியேற்றும் சக்தியான எருவாயும் ஒடுங்குகின்றன.

அக்கினியின் சத்துவ குண அம்சத்தில் புத்தியும், காணும் சக்தியான கண்ணும் ஒடுங்குகின்றன. ரஜோகுண அம்சத்தில் அபானவாயுவும் நடக்கும் சக்தியான காலும் ஒடுங்குகின்றன.

வாயுவின் சத்துவ குண அம்சத்தில் மனமும் தொட்டு உணரும் சக்தியான தோலும் ஒடுங்குகின்றன. ரஜோகுண அம்சத்தில் பிராணவாயுவும், இடுதல் ஏற்றல் செய்யும் சக்தியான கையும் ஒடுங்குகின்றன.

ஆகாயத்தின் சத்துவகுண அம்சத்தில் உள்ளமும் கேட்கும் சக்தியான காதும் ஒடுங்குகின்றன. ரஜோகுண அம்சத்தில் வியான வாயுவும் பேசும் சக்தியான வாக்கும் ஒடுங்குகின்றன.

இவ்வாறு தூல, சூட்சும சரீரங்கள் சூட்சும பூதங்களுக்குள் ஒடுங்கியவுடன் பழையபடியே அவை முக்குண சூட்சும பூதங்களாகிவிடும். இந்தச் சூட்சும பூதங்களும் பூமி நீரில் கரைந்து ஒடுங்குகிறது. நீர் அக்கினியில் வற்றி ஒடுங்குகின்றது. அக்கினி விளக்குப் போல வாயுவில் அணைந்து ஒடுங்கும்; வாயு ஆகாயத்தில் ஓய்ந்து ஒடுங்கும்.

இந்த ஆகாயம் விட்சேப சக்தியில் ஒடுங்கும். விட்சேப சக்தியும் ஆவரண சக்தியும் மூலப் பிரகிருதியின் தமோகுணமாய் ஆலம் விதையில் ஆலமரம் ஒடுங்கினாற்போல இன்னொரு படைப்புக்கு விதையாக அவித்தையிலும் மாயையிலும் ஒடுங்குகிறது.

இந்த அவித்தையும் மாயையும் அதிநுண்மையான மூலப்பிரகிருதி என்று சொல்லப்பட்ட விந்து தத்துவத்தில் ஒடுங்குகிறது. மூலப்பிரகிருதியான இந்த விந்து தத்துவமும் பாம்பு என்கின்ற பெயர்போய்க் கயிறாகக் கண்டதுபோலத் தனக்கு அதிஷ்டானமான பிரம்ம சைதன்யத்தில் ஒடுங்குகிறது.

தூல சரீரம் முதல் மாயை வரை உள்ள 35 தத்துவங்களும் பொய் என்று கண்டு 36ஆவது தத்துவமான பிரம்மமே தான் என்று தெளிந்து உணர்பவனே ஜீவன் முக்தன் ஆவான். இவ்வாறு தத்துவங்களின் ஒடுக்கம் சொல்லப்பட்டது.

நூல்

தத்துவங்களின் வகைகள்

இப்படித் தோன்றி ஒடுங்கின தத்துவங்கள் 36 ஆகும். அவையாவன: பூதங்கள் 5, தூல சரீரத் தத்துவங்கள் 6, சூட்சும சரீரத் தத்துவங்கள் 20, காரண சரீரமான மாயை, அவித்தை 2, இவற்றில் பிரதிபிம்பித்த ஈசுவரன் சீவன் - 2, இவைகளுக்கெல்லாம் அதிஷ்டான சைதன்யமாய் இருக்கின்ற பிரம்மம் 1 இவையாம்.

இவைகளில் பூதங்கள் 5, மாயை 1, மாயாப் பிரதி பிம்பரான ஈசுவரன் 1, பிரம்மம் 1 ஆக இந்த எட்டும் சகல பிராணிகளுக்கும் சமுதாயமாக

அனுபவிக்கப்படும். மற்றை இருபத்தெட்டும் அவன் அவனுக்குப் பிருதக் ஆக அனுபவிக்கப்படும்.

அஃது எங்ஙனம் எனில், பிருத்வி தத்துவம் ஒன்று இறக்கில் எல்லோருக்கும் ஆதாரம் இல்லை. மழை மறுக்கில் எல்லோருக்கும் சலம் இல்லை. தேயு இல்லாமல் இருந்தால் பாகம் இல்லை. வாடை, தென்றல் இல்லாவிட்டால் வாயு இயக்கம் இல்லை. ஆகாயம் இறக்கில் ஒருவருக்கும் அவகாசம் இல்லை. மாயையும் மாயாப் பிரதிபிம்பரும் இறக்கில் சகல சமயங்களுக்கும் தெய்வம் இல்லை. பிரம்மம் இல்லையேல் ஒருவருக்கும் அறிவு இல்லை. ஆகையால் இந்த எட்டும் எல்லோருக்கும் சமுதாயமாம்.

பிருதக் எங்ஙனம் எனின், ஒருவனுக்குத் தூல சரீரம் இறக்கில் எல்லோருக்கும் தூல சரீரம் இறவாதபடியினாலும், சூட்சும சரீரத்தில் ஒருவனுக்கு அங்க வைகல்யம் வந்தால், எல்லோருக்கும் வாராத படியினாலும், முத்தராயிருந்த சுகர் வாம தேவர் முதலியோருக்கு அவித்தையும் சீவனும் இறந்துபோயிருக்க, மற்றையோருக்கெல்லாம் அவித்தையும், சீவனும் இறவாத படியினாலும் இந்த இருபத்தெட்டுத் தத்துவங்களும் அவனவனுக்குப் பிருதக் என்பதில் சந்தேகமில்லை.

உரை

இப்படித் தோன்றி ஒடுங்கிய தத்துவங்கள் 36. இதில் 36ஆவது தத்துவமான பிரம்மத்தை ஒரு தத்துவமாகக் கூறுவது, விளக்கத்திற்காகவும் உபசாரத்திற்காகவும் மட்டுமே.

இதன்படி தோன்றி ஒடுங்கிய தத்துவங்கள்

பூதங்கள்	5
தூல சரீரத் தத்துவங்கள்	6
சூட்சும சரீரத் தத்துவங்கள்	20
மாயை அவித்தை	2
ஈசுவரன் சீவன்	2
பிரம்மம்	2
	36

இந்த 36 தத்துவங்களில் ஐம்பூதங்கள், ஈசுவரன், மாயை, பிரம்மம் ஆகிய எட்டுத் தத்துவங்களும் அனைத்து அண்டங்களுக்கும் உயிர்களுக்கும் பொதுவானவை.

அது எவ்வாறெனில் பூமி இல்லையெனில் உயிர்களுக்கு இருப்பிடம் இல்லை. நீர் இல்லை எனில் உயிர்கள் வாழ இயலாது. வாயு இல்லை எனில் மூச்சு இயங்காது. அக்கினி இல்லை எனில் எதையும் பதப்படுத்த முடியாது. ஆகாயம் இல்லை எனில் யாவற்றிற்கும் இடம் இல்லை. மாயையும் ஈசுவரனும் இல்லாது போனால் உலகில் உள்ள மதங்கள் அனைத்திற்கும் தெய்வங்கள் இல்லாமல் போகும். பிரம்மம் இல்லை எனில் அனைத்து உயிர்களுக்கும் அறிவு இல்லாமல் போகும்.

மற்றைய 28 தத்துவங்களும் ஒவ்வொரு உயிரினத்தாலும் வெவ்வேறாக அனுபவிக்கப்படுகின்றன. அனுபவங்கள் உயிருக்கு உயிர் வேறுபடும். ஒருவனுக்குத் தூல சரீரம் இறக்கில் எல்லோருக்கும் தூல சரீரம் இறப்பதில்லை. சூட்சும சரீரத்தில் ஒருவருக்கு அங்கக் குறைவு ஏற்படும்போது அது எல்லோருக்கும் ஏற்படுவதில்லை. முக்தர்களாக இருந்த

சுகர், வாமதேவர் ஆகியோருக்கு அவித்தையும் சீவனும் இறந்துபோக மற்றவர்களுக்கு எல்லாம் அவித்தையும் சீவனும் இறவாதபடியினால் 28 தத்துவங்களும் அவரவர்க்கு வெவ்வேறாக அமையும்.

நூல்

தத்துவங்களின் முப்பிரிவுகள்

இந்தத் தத்துவங்கள் முப்பத்தாறில் எப்போதும் தானாகவே காணப்படும் தத்துவம் ஒன்று. தனக்கு அந்நியமாகக் காணப்படுகிற தத்துவங்கள் ஏழு. தானாகவும் தனக்கு அந்நியமாகவும் அனுபவிக்கப்படுகின்ற தத்துவங்கள் இருபத்து எட்டு.

அஃது எங்ஙனம் எனில், அவத்தாத்திரய சாட்சியாய் இருக்கின்ற பிரம்ம சைதன்யம், எல்லா அவத்தையிலும் தானாக விளங்குகையினாலும், மற்றைத் தத்துவங்கள் போலத் தனக்கு அந்நியமாக விளங்காத படியினாலும், அந்தப் பிரம்ம சைதன்யம் ஒன்று மட்டுமே தானாகக் காணப்படுகிறது. பஞ்சபூதங்கள், மாயை, மாயாப் பிரதி பிம்பர் ஆக ஏழும் தம்தம் தொழிலான வெட்டு, கொத்து, உழவு, பஞ்சகிருத்தியம், தசாவதாரம் முதலானவை, ஒருக்காலும் தன்னுடைய தொழிலாகக் காணப்படாதபடியினாலே, தனக்கு அந்நியங்களே அல்லாமல் தானாக மாட்டா.

மற்றை இருபத்தெட்டுத் தத்துவங்களுள்ளே நான் பிராம்மணன், நான் சத்திரியன், நான் வைசியன், நான் சூத்திரன், நான் பிரம்மச்சாரி, நான் கிருகஸ்தன், நான் வானப்பிரஸ்தன், நான் சந்நியாசி, நான் ஆண், நான் பெண், நான் கறுவல், நான் சிவலை, கட்டையன், நெட்டையன், நான் பருத்தேன், இளைத்தேன் என்று

தானாக வழங்குகிற தூல சரீரம் ஆறு தத்துவங்களும் மற்றொரு வேளையிலே, தனக்குப் புறம்புபட்டு என்மாடு என் கன்று என்றாற்போல, என் சரீரம் பருத்தது, இளைத்தது, நரைத்தது, என் சரீரம் பிறந்து இத்தனை நாளாயிற்று என்று, தான் வேறு தூல சரீரம் வேறாக வழங்குகிறபடியினாலும்,

நான் கண்டேன், கேட்டேன், தொட்டேன், போகித்தேன், கொடுத்தேன், வாங்கினேன், நடந்தேன், புசித்தேன், சிந்தித்தேன், நிச்சயித்தேன், இந்தப் பஞ் சத்திற்குச் சீவித்தேன் என்று தானாக வழங்குகிற சூட்சும சரீரத் தத்துவங்கள் இருபதும், மற்றொரு வேளையிலே தனக்குப் புறம்புபட்டு, என் வீடு, என் உடைமை என்றாற்போல, என் கண், என் காது, என் மூக்கு, என் நாக்கு, என் கை, என் கால், என் மனம், என் புத்தி, என் அகங்காரம், என் சித்தம் என் பிராணன் என்று, தான் வேறு அவைகள் வேறாக வழங்குகிறபடியினாலும், நான் அறிவேன் நான் அறியேன் என்று தானாக வழங்குகிற அஞ்ஞானமும், சிதாபாசனும் மற்றொரு வேளையிலே தனக்குப் புறம்புபட்டு, என் அஞ்ஞானம், என் சீவன் என்று வழங்கக் கண்டபடியினாலும் இந்த இருபத்தெட்டுத் தத்துவங்களும் தானாகவும் தனக்கு அந்நியமாகவும் வழங்குகின்றது சித்தம்.

உரை

மேற்குறிப்பிட்ட 36 தத்துவங்களையும் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. தானாக மட்டுமே இருக்கக்கூடிய மூலத் தத்துவம்.
2. தனக்கு அந்நியமாக மட்டுமே இருக்கக் கூடிய தத்துவங்கள்.

3. தானாகவும் தனக்கு அந்நியமாகவும் இருக்கும் தத்துவங்கள்.

தானாக இருக்கும் மூலத்தத்துவம் பிரம்மம் ஒன்றே ஆகும். பிரம்மத்திற்கு வேறாக வேறு எந்த ஒரு பொருளும் இல்லை. ஆகவே அது மூன்று அவத்தைகளிலும் தானாக விளங்குகிறது.

தனக்கு அந்நியமாக இருக்கும் தத்துவங்கள் ஏழாகும். அவையாவன: ஐம்பூதங்கள், ஈசுவரன், மாயை ஆகியன. இவற்றுள் ஐம்பூதங்களின் பொறுத்தல், சேகரித்தல், தகித்தல், உலர்த்துதல், இடம் கொடுத்தல் ஆகிய ஐம்பூதங்களின் செயல்களும், படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஈசுவரனின் தொழில்களும், மாயையின் மச்சம், கூர்மம் முதலான பத்து அவதாரங்களும் சீவனது தொழில்கள் அல்ல. இவை சீவனுக்கு அந்நியமான தொழில்கள் ஆகும்.

தனக்கும் தனக்கு அந்நியமாகவும் இருக்கும் தத்துவங்கள் இருபத்து எட்டு ஆகும். அவையாவன தூல சரீரத் தத்துவங்கள் 6, சூட்சும சரீரத் தத்துவங்கள் 20, அவித்தை, சீவன் ஆகியன.

தூல சரீரம் தானாகச் சொல்லப்படும் போது நான் பிரம்மச்சாரி, நான் கறுப்பு, நான் படுத்தேன் என்றும் அதே தூலசரீரம் தனக்கு அந்நியமாகச் சொல்லப்படும்போது எனது சரீரம் இளைத்தது, எனது சரீரம் படுத்தது என்றும் சொல்லப்படுகிறது.

சூட்சும சரீரம் தானாகச் சொல்லப்படும்போது நான் பார்த்தேன், நான் கேட்டேன், நான் சிந்தித்தேன் என்று சொல்லப்படுகிறது. அதே சூட்சும சரீரம் தனக்கு அந்நியமாகச் சொல்லப்படும்போது எனது பொறிகள்,

எனது மனம், எனது புத்தி என்று சொல்லப்படுகிறது.

அவித்தை தானாகச் சொல்லப்படும் போது நான் அறியேன் என்றும், தனக்கு அந்நியமாகச் சொல்லப்படும்போது என் அறியாமை என்றும் சொல்லப்படுகிறது.

சீவன் தானாகச் சொல்லப்படும்போது நான் அறிவேன் என்றும் தனக்கு அந்நியமாகச் சொல்லப்படும்போது என் சீவன் என்றும் சொல்லப்படுகிறது.

இவ்வாறு இந்த இருபத்தெட்டுத் தத்துவங்களும் தனக்கு அந்நியமாக இருப்பது உறுதியாகிறது.

நூல்

36ஆம் தத்துவமே ஆத்ம வடிவ சிவம்

இப்படிச் சொன்ன குருவைப் பார்த்துச் சீடன் கேட்கும்படி: இந்த இருபத்தெட்டுத் தத்துவங்களும் தானானால், சாட்சியைப் போல ஒரு தன்மையாகத் தோன்ற வேண்டுமே அல்லாமல், பஞ்ச சபூதங்களைப்போலத் தனக்கு அந்நியமாகக் காணக் கணக்கில்லை. இந்த இருபத்தெட்டும் தனக்கு அந்நியமேயானால், எப்போதும் புறம்பு பட்டே இருக்க வேண்டுமல்லாமல், தானாக வழங்கக் கணக்கில்லை. தானும் தனக்கு அந்நியமுமாய் இருக்குமென்கிறது, இருட்டாதித்தன் என்றாற்போலும், வெள்ளாள தீட்சிதன் என்றாற்போலும் விருத்தமாம் என்னும் சங்கைக்கு:-

பாரமார்த்தமாகத் தான் என்கிறது ஒருவகையும், அத்தியாசத்தினாலே தான் என்கிறது ஒரு வகையும் ஆக

இருவகையும் உண்டு. சாட்சி சைதன்யத்தைத் தான் என்கிறது கட்டையைக் கள்ளன் என்றாற்போலும், பழுதையைப் பாம்பு என்றாற்போலும், புத்திர தாராதிகளைத் தான் என்றாற்போலும், மயக்கமே அல்லாமல் உண்மை அல்ல.

ஆகையினால் அஞ்ஞான காலம் தொடங்கித் தானல்ல என்று காணப்பட்ட தத்துவங்கள் - 7, இப்போது இப்படி விவேகம் பண்ணின பின் தான் அல்ல என்று காணப்பட்ட தத்துவங்கள் - 28, ஆக இந்த 35 தத்துவங்களையும், அதற்குச் சொன்ன குணம் குறிகளுடனே கூடக் காண்கின்ற அறிவானது, கடத்தைப் பார்க்கின்றவன் கடத்திற்குப் புறம்பாகவே இருந்து கடத்தைப் பார்க்கின்றது போல, அவைகளை அறிகின்றது என்றும், 36ஆம் தத்துவமாகிய அதுவே தான் என்றும், அதுவே பரமசிவம் என்றும் கலக்கமறத் தெளிந்தவனே சிவதரிசனம் உடைய சீவன் முத்தன் என்று சொல்லப்படுவன் என்று உத்தரம்.

உரை

உடனடியாகச் சீடனுக்கு ஒரு சந்தேகம் எழுந்தது. மேற்கூறிய 28 தத்துவங்களும் பிரம்மத்தைப்போலத் தானாக இருக்க வேண்டும். அல்லது பஞ்ச பூதங்களைப்போலத் தனக்கு அந்நியமாக இருக்க வேண்டும். அவ்வாறின்றித் தானாகவும் தனக்கு அந்நியமாகவும் இருப்பது என்பது கதிர் இருட்டு என்பது போலவும், வெள்ளாளப் பிராம்மணன் என்பது போலவும் குழப்பமாக உள்ளதே என்றான்.

குரு இதற்குப் பதிலாகச் "சீடனே, உண்மையாகத் 'தான்' என்பது ஒருவகை. உபசாரத்திற்காகத் 'தான்' என்பது மற்றொரு வகை. பிரம்மத்தைத் 'தான்'

என்பது உண்மையே தவிர உபசாரம் அல்ல. தனக்கு அந்நியமாக இருக்கும் 28 தத்துவங்களையும் 'தான்' என்பது கட்டையை இருட்டில் கண்டு கள்ளன் என்பது போலவும், கயிற்றைப் பாம்பு என்பது போலவும், மனைவி, குழந்தைகளைத் தான் என்பது போலவும் உபசாரமே தவிர உண்மை அல்ல."

எனவே, தன்னைப் பிரம்மம் என்று உணராத அஞ்ஞான காலம் தொடங்கித் தனக்கு அந்நியம் என்று புரிந்துகொண்ட பஞ்சபூதங்கள், மாயை ஈசுவரன் ஆகிய 7 தத்துவங்களுடன், இப்போது ஆராய்ந்து தனக்கு அந்நியம் என்று உணர்ந்துகொண்ட 28 தத்துவங்களையும், 'தான்' அல்ல என்று உணர வேண்டும்.

எவ்வாறெனில், பானை என்ற பொருளைப் பார்க்கும்போது அதைப் பானையாகப் பார்க்காமல் களிமண்ணைப் பார்ப்பது போல 35 தத்துவங்களையும் பிரம்மமாகக் கண்டு அதுவே நாம் என்று தெளிய வேண்டும். அப்படித் தெளிந்து உணர்ந்த ஞானியே சீவன் முக்தன் எனப்படுவான் என்று சீடனின் சந்தேகத்தைக் குரு தெளிவித்தார்.

நூல்

பந்த மோட்சங்களின் காரணம்

இப்படிப் பிரம்மமே தாம் என்றும், மற்றை 35 தத்துவங்களும் தமக்கு அந்நியம் என்றும் பிரித்து அறியாத அவிவேகிகள், அகங்காரக் கிரந்தியினாலே, புத்திர தாராதிகள் தபிக்கின்றதைத் தாம் தபிக்கிறோம் என்ற மூடகரம் போல, இந்த இருபத்தி எட்டினுடைய தொழில்களையும் தம்

தொழில் என்று மயங்குகின்றபடியினாலே, இந்த இருபத்தெட்டினாலும் ஆர்ச்சிக்கப்பட்ட புண்ணிய பாவங்களால் கட்டுப்பட்டு அந்தக் கர்மத்தின்படியே சனன மரணாதி சம்சாரத்திலே அடிபடுகிறோம் என்று மயங்குவர்.

பிரம்ம சைதன்யமே தான் என்றும் மற்றை முப்பத்தைந்தும் தான் அல்ல என்றும், இந்த இருபத்தெட்டும் புசிக்கின்றதை நான் புசிக்கவில்லை என்றும், திடம்படத்தேறி மயக்க மற்று இருக்கின்றபடியினால், இந்த இருபத்தெட்டினாலும் ஆர்ச்சிக்கப்பட்ட புண்ணிய பாவங்களினின்றும் விடுபட்டுக் கர்மம் இல்லாதபடியினால், சனன மரணாதி சம்சாரம் இல்லாமல், முத்தனாய்ப் பிரம்ம மாத்திரமாகவே இருப்பன்.

இவனைச் சீவன் முக்தன் என்றும், திடப் பிரக்ஞன் என்றும் அதிவர்ணாச்சிரமி என்றும், குணாதீதன் என்றும், பகவற் பத்தன் என்றும், பிராமணன் என்றும் வாசிட்டம் முதலிய சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. சகலரும் இந்தத் தத்துவங்களை விசாரம் பண்ணி மோட்சம் அடையக் கடவர்.

உரை

இவ்வாறு பிரம்மமே தான் என்றும் மற்றைய முப்பத்தைந்து தத்துவங்களும் தனக்கு வேறானவை என்றும் உணராமல், தன் மனைவி, தன் மக்கள், தன் சொத்து என்று மயங்குகின்றவன், பக்குவம் இல்லாத அஞ்ஞானி ஆவான். மேற்கண்ட இருபத்தெட்டுத்தத்துவங்களின் செயல்களைத் தனது செயல் என்றும், தன் மனைவி மக்கள் துன்பத்தைத் தனது துன்பம் என்றும் கருதி அபிமான மயக்கத்தாலே

துன்பப்படுகிறான். மேலும் இந்த இருபத்தெட்டுத் தத்துவங்களின் செயல்களால் ஏற்படும் கர்ம வினைகளினாலே நல்வினை, தீவினை எனவும் அதனால் தொடர்கின்ற பாவ புண்ணியங்களுக்கும் அவற்றால் ஏற்படும் பிறப்பு இறப்புச் சுழற்சியிலும் அகப்பட்டுத் திண்டாடுகிறான்.

இந்த வினைகளை நான் செய்யவில்லை. எனவே இதனால் விளையும் இன்ப துன்பங்களைத் தான் ஏற்கவில்லை என்று திடம்படத்தேறி, புண்ணிய பாவம் எல்லாவற்றையும் ஒதுக்கி, மற்ற பற்றுகளை விட்டுச் சாந்தமாக, நடப்பவை அனைத்திலும் எவ்வகையிலும் பங்கேற்காமல் சாட்சியாக மாத்திரமே இருப்பவன் 'சீவன் முக்தன்' என்று அழைக்கப்படுகிறான்.

செயலும் செய்பவனும் இன்றி, சாட்சியாக மட்டுமே இருப்பவனைத் திடமான சித்தம் உடைய திடப் பிரக்ஞன் என்றும், குணங்களைக் கடந்து நின்ற குணாதீதன் என்றும், சாதி சாஸ்திரங்களைக் கடந்து நின்ற அதிவர்ணாச்ரமி என்றும், பகவானின் பாதத்தில் இருக்கிற பகவற்பத்தன் என்றும் அழைக்கப்படுகிற பெருமை உடையவன் ஆவான்.

ஆகவே அனைவரும் இந்தத் தத்துவங்களை விசாரம் செய்து மோட்சம் அடைய வேண்டும்.

குருவின் திருவடி வாழ்க.

முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர்
ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்கள்
வெளியிட்டுப் பாராட்டிய
சங்க இலக்கிய நூல்கள்

கோவிலூர் மடாலயம் வெளியிட்ட சங்க இலக்கிய மக்கள் பதிப்பு வரிசை

ஒவ்வொரு நூலும் கொண்டு கூட்டு, தெளிவுரை, துறை விளக்கம், அருஞ்சொற்பொருள், சிறப்பு விளக்கம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

பத்துப்பாட்டு	–	முனைவர் ச.வே. சுப்பிரமணியன்	325.00
குறுந்தொகை	–	முனைவர் தமிழண்ணல்	250.00
பரிபாடல்	–	முனைவர் இரா. சாரங்கபாணி	200.00
கலித்தொகை	–	முனைவர் சுப. அண்ணாமலை	275.00
நற்றிணை	–	முனைவர் கதிர் மகாதேவன்	250.00
ஐங்குறுநூறு	–	முனைவர் அர. சிங்காரவடிவேலன்	250.00
பதிற்றுப்பத்து	–	முனைவர் அ.மா. பரிமணம்	200.00
புறநானூறு	–	புலவர் இரா. இளங்குமரன்	275.00
அகநானூறு	–	கவிஞர் நா. மீனவன், தெ. முருகசாமி	600.00

முதன்மைப் பதிப்பாசிரியர்கள்

முனைவர் தமிழண்ணல், முனைவர் சுப. அண்ணாமலை

கோவிலூர் மடாலய வெளியீடுகள்

- **கோவிலூர் மரபு வேதாந்த நூல்கள்** *(முதல் பாகம்)*
  (நாநா சீவ வாதக் கட்டளை, கீதாசாரத் தாலாட்டு, சசிவன்ன போதம் மூன்றும் அடங்கியது.)

- **கோவிலூர் மரபு வேதாந்த நூல்கள்** *(இரண்டாம் பாகம்)*
  (மகாராஜா துறவு, வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம் ஆகிய மூன்றும் அடங்கியது.)

- **கோவிலூர் மரபு வேதாந்த நூல்கள்** *(மூன்றாம் பாகம்)*
  (இலட்சணா விருத்தி, வேதாந்த சூடாமணி, கைவல்ய நவநீதம் ஆகிய மூன்றும் அடங்கியது.)

- **கோவிலூர் மரபு வேதாந்த நூல்கள்** *(நான்காம் பாகம்)*
  (விவேக சூடாமணி, அஞ்ஞவதைப் பரணி, ஈசுவரகீதை ஆகிய மூன்றும் அடங்கியது.)

- **பகவத் கீதை** *(ஸ்ரீ பட்டனார் - மூலமும் எளிய உரையும்)*

- **பகவத் கீதை** *(ஸ்ரீ பொன்னம்பல சுவாமிகள் உரை)*

- **கைவல்லிய நவநீதம்**
  (ஸ்ரீ பொன்னம்பல சுவாமிகள் உரை)

- **சங்க இலக்கிய நூல்கள்** *(11 பகுதிகள்)*
  முதன்மை பதிப்பாசிரியர்கள்:
  தெய்வத்திரு. தமிழண்ணல்
  தெய்வத்திரு. சுப. அண்ணாமலை,

- **திருமந்திரம்** *(3 பகுதிகள்)*
  (பாடபேத ஆய்வும் உரையும், சுப. அண்ணாமலை)